# சுவிசேஷங்கள்

பாடம் 5

## யோவான் எழுதின சுவிசேஷம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

பின்னணி ........ 2

எழுத்தாளர் ........ 2

பாரம்பரிய கண்ணோட்டம் ........ 2

தனிப்பட்ட வரலாறு ........ 7

எழுதப்பட்ட தருணம் ........ 9

இடம் ........ 9

வாசகர்கள் ........ 11

தேதி ........ 13

நோக்கம் ........ 16

அமைப்பு மற்றும் உள்ளடக்கம் ........ 18

முன்னுரை ........ 19

இயேசுவின் பொது ஊழியம் ........ 20

ஊழியத்திற்கான ஆயத்தம் ........ 20

முதல் பஸ்கா ........ 23

பெயரிடப்படாத பண்டிகை ........ 26

இரண்டாம் பஸ்கா ........ 26

கூடாரப் பண்டிகை ........ 27

பிரதிஷ்டை பண்டிகை ........ 28

மூன்றாம் பஸ்கா ........ 29

இயேசுவின் தனிப்பட்ட ஊழியம் ........ 29

கடைசி இராப்போஜனம் ........ 30

மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ........ 34

முடிவுரை ........ 39

முக்கிய கருப்பொருள்கள் ........ 40

விசுவாசித்தல் ........ 41

கிறிஸ்து ........ 43

தேவாலயம் ........ 44

பண்டிகைகள் ........ 48

நியாயப்பிரமாணம் ........ 50

தேவ குமாரன் ........ 54

தெய்வீகமானவர் ........ 54

இயேசுவின் மனிதத் தன்மை ........ 57

ஜீவன் ........ 58





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**முடிவுரை......................................................................................................................................61**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

அவள் பெயர் சோபியா. சரி, அது அவளுடைய உண்மையான பெயர் அல்ல. அவள் இப்போது இயேசுவை நம்புவதால், அவளைக் கொன்றுவிடுவதாக அச்சுறுத்தும் நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து தன்னை மறைக்க அவள் பயன்படுத்தும் பெயர் இதுவாகும். இயேசுவை விசுவாசித்ததால் சில சமயங்களில் உபத்திரவத்தைக் கொண்டுவரும் பின்னணியில் இருந்து வந்தவள் சோபியா. இன்று உலகின் பல பகுதிகளில் அது உண்மையாக இருக்கிறது, முதல் நூற்றாண்டிலும் இது உண்மையாக இருந்தது. அப்போஸ்தலனாகிய யோவானின் நாட்களில், யூத விசுவாசிகள் ஜெப ஆலயங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர், ஏனென்றால் இயேசு தங்கள் முன்னோர்களுக்கு தேவன் அளித்த பண்டைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதல் என்று அவர்கள் நம்பினர். அவர்கள் தங்கள் குடும்பங்கள், அவர்களின் வரலாறு மற்றும் அவர்களின் மதத்திலிருந்து துண்டிக்கப்பட்டனர். துன்புறுத்தப்பட்ட இந்த விசுவாசிகளுக்கு இயேசு உண்மையிலேயே தேவனின் குமாரனாகிய கிறிஸ்து என்பதை உறுதிப்படுத்த யோவான் எழுதினார். கடினமான சூழ்நிலையிலும் அவர்கள் இயேசுவுக்கு உண்மையாக இருந்து, அவரில் பரிபூரண வாழ்க்கையை அனுபவிப்பதை உறுதிசெய்ய அவர் விரும்பினார்.

இதுவே சுவிசேஷங்கள் என்கிற நமது தொடரின் ஐந்தாம் பாடமாகும். இந்தத் தொடரில், இயேசு எவ்வாறு தேவனுடைய ராஜ்யத்தையும் மகிமையையும் பூமியின் வரலாற்றில் கொண்டு வந்தார் என்பதைச் சொல்லும் வேதாகமத்தின் நான்கு புத்தகங்களை நாம் ஆராய்ந்து வருகிறோம். இந்த பாடத்திற்கு ”யோவான் எழுதின சுவிசேஷம்” என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்தில், யோவானின் சுவிசேஷத்தை அதிகப் புரிதலுடன் படிக்கவும், தேவனை இன்னும் ஆழமாக நேசிக்கவும், கிறிஸ்துவில் நம் வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்கவும் உதவும் வகையில் அதைப் படிப்போம்.

நம் பாடத்தில், யோவானின் சுவிசேஷத்தை மூன்று முக்கியமான வழிகளில் படிப்போம். முதலில், யோவான் சுவிசேஷ புத்தகத்தின் பின்னணியைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, புத்தகத்தின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை ஆராய்வோம். மூன்றாவதாக, யோவான் சுவிசேஷத்தின் முக்கிய கருப்பொருள்களைப் பார்ப்போம். யோவான் சுவிசேஷத்தின் பின்னணியை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# பின்னணி

யோவான் சுவிசேஷத்தின் பின்னணியை அதன் எழுத்தாளரையும் எழுதப்பட்ட சந்தர்ப்பத்தையும் கருத்தில் கொண்டு ஆராய்வோம். யோவான் சுவிசேஷத்தின் எழுத்தாளரைப் பற்றி முதலில் பார்க்கலாம்.

## எழுத்தாளர்

சபை வரலாறு முழுவதும், கிறிஸ்தவர்கள் இந்த சுவிசேஷம் இயேசுவின் சீஷரான யோவானால் எழுதப்பட்டது என்று நம்பினார்கள், அவர் செபதேயுவின் குமாரனான யாக்கோபின் சகோதரன் ஆவார். யோவான் இயேசுவின் மிகவும் நம்பகமான தோழர்களின் உள் வட்டங்களில் ஒருவராகவும், ஆரம்பகால கிறிஸ்தவ சமூகத்தில் நம்பிக்கையின் தூணாகவும் இருந்தார். அவருடைய புதிய ஏற்பாட்டு எழுத்துக்களில் நான்காவது சுவிசேஷம் மட்டுமல்ல, 1, 2 மற்றும் 3 யோவான் நிருபங்களும், வெளிப்படுத்தின விசேஷமும் அடங்கும்.

யோவான் சுவிசேஷத்தின் எழுத்தாளரை இரண்டு நிலைகளில் படிப்போம். முதலில், அப்போஸ்தலனாகிய யோவான் இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்ற பாரம்பரிய கருத்து நம்பகமானது என்று பார்ப்போம். இரண்டாவதாக, யோவானின் தனிப்பட்ட வரலாற்றை ஆராய்வோம். நான்காவது சுவிசேஷத்தை எழுதியவர் அப்போஸ்தலனாகிய யோவான் என்ற பாரம்பரிய கண்ணோட்டத்தை முதலில் பார்க்கலாம்.

### பாரம்பரிய கண்ணோட்டம்

> யோவான் சுவிசேஷம் வேதாகமத்தில் உள்ள புத்தகங்களில் ஒன்றாகும், அது யார் எழுதியது என்**பதை** சொல்லவில்லை. அங்குதான் நாம் தொடங்குகிறோம். வேதாகமத்தை நம்பும் கிறிஸ்தவர்களாகிய நாம், இந்த புத்தகத்தை எழுதியவர் யார் என்பதைக் குறித்த உறுதியான அறிக்கை நம்மிடம் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறோம். இரண்டாம் நூற்றாண்டிற்குள், டெர்டுல்லியான் மற்றும் ஐரேனியஸ் மற்றும் இன்னும் சிலர் நிச்சயமாக அப்போஸ்தலனாகிய யோவான் தான் இதன் எழுத்தாளர் என்றனர். அப்படியானால், கடைசியாக வாழும் சில அப்போஸ்தலர்களுடன் அல்லது குறைந்த பட்சம் அடுத்த தலைமுறையினருடன் தொடர்பு வைத்திருந்த காலத்தை அவர்கள் ஏன் இவ்வளவு நெருக்கமாக நம்பினார்கள் என்ற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கேள்வியை நீங்கள் கேட்க வேண்டும். மேலும் அதை நம்பிய வேறு சிலரும் இருந்தனர். பிறகு நீங்கள் சுவிசேஷத்தின் உள்ளே செல்லுங்கள். நீங்கள் புத்தகத்தில் உள்ள உள் ஆதாரங்களைப் பார்க்க வேண்டும், நிச்சயமாக, புத்தகத்தை எழுதியவர் மற்றும் அது நடந்தபோது அவர்கள் இருந்த ஒரு கதையைப் பற்றி எழுதும் நேரில் கண்ட சாட்சி விவரங்கள் உங்களிடம் உள்ளன. உதாரணமாக, கர்த்தருடைய இராப்போஜனத்தில், ஒரு நபர் மேஜையில் இருக்கிறார், அன்பான சீஷன் இயேசுவுடன் மேஜையில் அமர்ந்திருக்கிறார், அது மிகவும் வல்லமை வாய்ந்த விஷயமாகும்.
>
> Dr. ஸ்டீவ் ஹார்ப்பர்

மூன்று வகையான ஆரம்ப சான்றுகளின் காரணமாக யோவான் பெரும்பாலும் நான்காவது சுவிசேஷத்தை எழுதினார் என்பதை நாம் உறுதிப்படுத்தலாம். முதலில், யோவான் சுவிசேஷத்தின் பண்டைய கையெழுத்துப் பிரதிகளை நாம் பரிசீலிப்போம்.

**கையெழுத்துப் பிரதிகள்.** நான்காவது சுவிசேஷத்தின் பல பண்டைய கையெழுத்துப் பிரதிகள் எழுத்தாளரின் பெயரை யோவான் என்று பட்டியலிடுகின்றன. எடுத்துக்காட்டாக, பாப்பிரஸ் 66 மற்றும் பாப்பிரஸ் 75, இரண்டும் கி.பி.200 யைச் சேர்ந்தவை, இவை இந்த புத்தகத்தை *யூவாங்கெலியோன் கடா ஐயோனேன்* என்று அழைக்கின்றன, அதாவது "யோவான் எழுதின சுவிசேஷம்" என்று இதற்கு பொருள். மேலும் நான்காம் நூற்றாண்டின் மத்தியில் எழுதப்பட்ட *கோடெக்ஸ் சினைட்டிகஸ்* மற்றும் கோடெக்ஸ் வாடிகனஸ் போன்ற பிரதிகள், இதை "யோவான் எழுதின சுவிசேஷம்" என்று பொருள்படும் *கேடா ஐயோனேன்* என்று அழைக்கின்றன.

நிச்சயமாக, யோவான் ஒரு அசாதாரண பெயர் அல்ல. ஆனால் ஆரம்பகால சபையின் எழுத்துக்களில் இருந்து இது வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிக முக்கியமான "யோவான்", அதாவது அப்போஸ்தலனாகிய யோவானைக் குறிக்கும் நோக்கம் கொண்டது என்பது தெளிவாகிறது.

நான்காவது சுவிசேஷத்தை யோவான் எழுதினார் என்று பண்டைய கையெழுத்துப் பிரதிகள் குறிப்பிடுவது மட்டுமல்லாமல், சுவிசேஷத்தின் உள் ஆதாரம் யோவான் தான் அதன் எழுத்தாளராக இருக்கலாம் என்ற முடிவுக்கு நம்மை இழுக்கிறது.

**உள் ஆதாரம்.** சுவிசேஷத்தின் எழுத்தாளர், இயேசுவுக்கும் யூதத் தலைமைக்கும் இடையே யூத பிரமாணத்தின் குறிப்பிட்ட விஷயங்களில்

விவாதங்கள் நடந்ததாக கூறினார். அப்போஸ்தலனாகிய யோவான் ஒரு பாலஸ்தீன யூதனாக இருந்ததைப் போலவே யூத பிரமாணத்தைப் பற்றிய வலுவான புரிதல் எழுத்தாளருக்கு இருந்தது என்பதை இந்த விவாதங்கள் காட்டுகின்றன.

ஒரு படி மேலே சென்று, இந்த சுவிசேஷத்தை எழுதியவர் உண்மையில் ஒரு பாலஸ்தீனிய யூதர் என்பதற்கு வலுவான சான்றுகள் உள்ளன. சுவிசேஷத்தின் பாலஸ்தீன தன்மை இயேசுவின் ஊழியத்தின் விளக்கங்களில் காணப்படுகிறது. உதாரணமாக, பாலஸ்தீன யூதத் தலைவர்களின் பார்வையில் மதப் பயிற்சியின் முக்கியத்துவத்தை 7:15 இல் அவர் குறிப்பிட்டார்.

நான்காவது சுவிசேஷத்தின் எழுத்தாளர் மதக் கருப்பொருள்களைக் குறிப்பிட்டார் மற்றும் முதல் நூற்றாண்டு பாலஸ்தீனிய யூத மதத்தின் பிற எழுத்துக்களைப் போலவே சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்தினார். உதாரணமாக, யோவானின் சுவிசேஷம் மற்றும் கும்ரானில் உள்ள எழுத்துக்களுக்கு இடையே உள்ள மொழியில் உள்ள ஒற்றுமைகளை பல அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர், இது பொதுவாக சவக்கடல் சுருள்கள் என்று அழைக்கப்படுகிறது. உதாரணமாக, ”ஒளியின் பிள்ளைகள்” என்ற வார்த்தை பயன்பாடு கும்ரான் ஆவணங்கள் மற்றும் யோவான் 12:36 ஆகிய இரண்டிலும் தோன்றுகிறது. மேலும் ”ஜீவ ஒளி” என்ற சொற்றொடர் கும்ரானின் எழுத்துக்களிலும் யோவான் 8:12 லும் தோன்றுகிறது. இது போன்ற ஒற்றுமைகள் நான்காம் சுவிசேஷத்தின் எழுத்தாளர் முதல் நூற்றாண்டு பாலஸ்தீனத்தின் மத உரையாடலை நன்கு அறிந்திருந்தார் என்பதை இது குறிக்கிறது.

இந்த சுவிசேஷத்தை வாசிக்கும்போது இது ஒரு பாலஸ்தீன யூதரால் எழுதப்பட்டது என்ற உணர்வைத் தருவது மட்டுமல்லாமல், இது ஒரு நேரில் கண்ட சாட்சியால் எழுதப்பட்டது என்ற தோற்றத்தையும் தருகிறது. இது அப்போஸ்தலனாகிய யோவானின் சுயவிவரத்துடன் பொருந்துகிறது, ஏனென்றால் அவரே இயேசுவின் வாழ்க்கையை நேரில் கண்ட சாட்சியாக இருந்தார். எழுத்தாளர் நேரில் கண்ட சாட்சியாக இருந்ததற்கான ஆதாரங்களை பல இடங்களில் காண்கிறோம். உதாரணமாக, இயேசுவின் மரணத்திற்குப் பிறகு, யோவான் 19:35 இவ்வாறு கூறுகிறது:

> அதைக் கண்டவன் சாட்சிகொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது. நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான் யோவான் 19:35).

இங்கே எழுத்தாளர் இயேசுவின் மரணத்தை நேரில் கண்ட சாட்சி என்று தன்னைப் பற்றி தெளிவாகக் குறிப்பிட்டார். யோவான் 21:20-24 இல் இதேபோன்ற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கூற்றை நாம் காண்கிறோம், இது நேரில் கண்ட சாட்சியை ”இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்” என்று அழைப்பதன் மூலம் அடையாளம் காட்டுகிறது, மேலும் எழுத்தாளர் இயேசுவுடன் நெருங்கிய தனிப்பட்ட உறவைக் கொண்டிருந்தார் என்பதைக் குறிக்கிறது.

> கடைசி இராப்போஜனத்தில் யோவான் இயேசுவின் மார்பில் தலையை வைத்தபோது அவருக்கு எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். அந்த இரண்டு மனிதர்களுக்கும் இடையே இருந்த அந்த நெருக்கத்தைப் பற்றி யோசித்துப் பாருங்கள். இயேசு மரிக்கும் போது சிலுவையில் கூட, அவர் தனது தாயைப் பார்த்துக் கொள்வதற்கு தனது சகோதர சகோதரிகளிடம் அல்ல ஆனால் அப்போஸ்தலனாகிய யோவானிடமே சொல்கிறார். அவர்கள் இருவருக்கும் இடையே மிக ஆழமான, நெருக்கமான உறவு இருந்திருக்க வேண்டும். மேலும் சுயவிளக்கத்தில் கூட, யோவான் தன்னை இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் என்று சொல்வது கர்வத்திலோ, பெருமையிலோ அல்ல என்று விவரிக்கிறார்.
>
> Dr. தாடியஸ் ஜே.ஜேம்ஸ், Jr.

”இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்” என்கிற சொற்றொடர் யோவான் சுவிசேஷத்தில் பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக, யோவான் 13:23 இன் படி, அன்பான சீஷன் கடைசி இராப்போஜனத்தில் இயேசுவின் அருகில் சாய்ந்திருந்தார். 19:26-27 ல், இயேசு சிலுவையில் இருந்து இந்த அன்பான சீஷனிடம் பேசினார், மேலும் அவரது தாயின் பராமரிப்பை அவரிடம் ஒப்படைத்தார். இதே சீஷன் 20:2-8 இல் உயிர்த்தெழுந்த காலையில் பேதுருவுடன் கல்லறைக்கு ஓடினான். மேலும் 21:7 இல், அன்பாயிருந்த சீஷன் இயேசுவை கரையில் முதலில் அடையாளம் கண்டுகொண்டான்.

> அப்போஸ்தலனாகிய யோவானின் பெயர் அவர் எழுதிய சுவிசேஷத்தில் குறிப்பிடப்படவில்லை, ஏனென்றால் அவர் தன்னை இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷனாக அடையாளப்படுத்த விரும்புகிறார். அதைச் செய்வதன் மூலம், அவர் ஒரு அர்த்தத்தில் தனது பணிவை வெளிப்படுத்துகிறார், பின்னர் மற்றொரு அர்த்தத்தில் கர்த்தருடனான தனது உறவைக் கொண்டாடுகிறார். மற்ற எல்லா சீஷர்களைப் பற்றியும் அவர் குறிப்பிடும்போது, அவர் தனது சொந்தப் பெயரைக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> குறிப்பிடுவதில்லை. நீங்கள் சுவிசேஷத்தை வாசிக்கும்போது, அது ஒருவித சுவாரஸ்யமாக இருக்கிறது.
>
> Rev. லேரி காக்ரெல்

சுவிசேஷத்தில் ஒருமுறை கூட யோவான் அவருடைய பெயரால் குறிப்பிடப்படவில்லை. மற்ற சுவிசேஷங்களில் அடிக்கடி குறிப்பிடப்பட்ட ஒரு நபர் இதில் ஒருபோதும் பெயரிடப்படவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. இந்த சுவிசேஷத்தை எழுதியது அன்பான சீஷனாகிய யோவான் என்பதும், மனத்தாழ்மையின் காரணமாக அவர் தனது சொந்த பெயரைக் குறிப்பிடுவதைத் தவிர்த்தார் என்பதும் பெரும்பாலும் நம்பப்படுகிறது. மாறாக, இரட்சகர் தன்மீது கொண்டிருந்த அற்புதமான தெய்வீக அன்பைத் தவிர, அவர் ஒருபோதும் இயேசுவைப் பின்பற்றியவராக இருந்திருக்க மாட்டார் என்ற உண்மையின் மீது அவர் கவனம் செலுத்தினார்.

நான்காவது சுவிசேஷமே யோவான் தான் அதன் எழுத்தாளர் என்ற நம்பிக்கைக்கு பெரும் ஆதரவை அளிக்கிறது. அதுமட்டுமல்ல ஆரம்பகால சபையின் எழுத்துக்கள் அந்த முடிவை உறுதிப்படுத்தின.

**ஆரம்ப சபை.** கி.பி.170 முதல் 190 வரை நான்காவது சுவிசேஷம் அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டது என்ற நம்பிக்கை சபையில் உறுதியாக நிறுவப்பட்டது. அலெக்ஸாண்டிரியாவின் கிளெமென்ட், டெர்டுல்லியான் மற்றும் ஐரேனியஸ் ஆகியோர் செபெதேயுவின் குமாரனாகிய யோவான் தான் எழுத்தாளர் என்பதை உறுதிப்படுத்தினர். சுமார் கி.பி.325 இல், சபை வரலாற்றாசிரியர் யசூபியஸ் தனது *எக்ளசியாஸ்டிக்கல் ஹிஸ்டரி,* புத்தகம் 5, அத்தியாயம் 8, பிரிவு 4 இல் ஐரேனியஸின் பின்வரும் மேற்கோளை வழங்கினார்:

> அப்பொழுது, அவருடைய மார்பில் இளைப்பாறின கர்த்தருடைய சீஷனாகிய யோவான், ஆசியாவிலுள்ள எபேசுவில் வாழ்ந்தபோது, தானும் சுவிசேஷத்தை அறிவித்தார்.

ஐரேனியஸின் சாட்சி குறைந்தது இரண்டு காரணங்களுக்காக குறிப்பாக முக்கியமானது. முதலாவதாக, யசூபியஸின் கூற்றுப்படி, ஐரேனியஸ் சிமிர்னாவின் பேராயர் பாலிகார்ப்பின் சீஷராக இருந்தார். சிமிர்னா சபையில் இருந்த அவர்களின் பேராயர் கொல்லப்பட்டது பற்றிய கடிதத்தின்படி, பாலிகார்ப் அப்போஸ்தலனாகிய யோவானின் சீஷராக இருந்தார். எனவே, யோவானை தனிப்பட்ட முறையில் அறிந்த ஒரு நம்பகமான மனிதரிடமிருந்து யோவான் தான் இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளர் என்பது பற்றி ஐரேனியஸ் அறிந்திருக்க முடியும். இரண்டாவதாக, ஐரேனியஸ் பண்டைய சபையில் பரவலாகப் பயணம் செய்தார்,

எனவே நான்காவது சுவிசேஷத்தை எழுதியவர் பற்றிய அவரது புரிதலைத் தெரிவிக்கக்கூடிய பல தகவல்களை நன்கு அறிந்திருந்தார்.

யோவான் எழுத்தாளர் இல்லை என்பதற்கு அதிக எதிர்ப்புகள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பண்டைய சபையின் எழுத்துக்களில் எங்கும் செபெதேயுவின் குமாரனான யோவானைத் தவிர வேறு எந்த சுவிசேஷத்திற்கான எழுத்தாளருக்கும் இந்த அளவு ஆதரவு இல்லை. உண்மையில், யோவானின் சுவிசேஷத்தை எதிர்த்த இரண்டு குழுக்களான  அலோகோய் மற்றும் மார்சியோனைட்ஷை மட்டுமே வரலாறு பதிவு செய்கிறது. அவர்கள் யோவான் சுவிசேஷத்தின் போதனைகளை நிராகரித்தாலும், அவர்கள் அவர் இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளர் என்பதை மறுத்தார்கள் என்பது முற்றிலும் தெளிவாக இல்லை.

இந்த சுவிசேஷம் யோவானால் எழுதப்பட்டது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிப்பது சாத்தியமில்லை என்றாலும், அப்போஸ்தலனாகிய யோவான் எழுதியவர் என்ற பழங்கால பாரம்பரியம் மிகவும் உறுதியானதாக இருக்கிறது.

யோவான் நான்காவது சுவிசேஷத்தை எழுதினார் என்ற பாரம்பரியக் கண்ணோட்டத்தை இப்போது நாம் பரிசீலித்தோம், அது கட்டாயம் என்று பார்த்தோம், இப்போது யோவானின் தனிப்பட்ட வரலாற்றைப் பார்ப்போம்.

## தனிப்பட்ட வரலாறு

இயேசுவின் மற்ற சீஷர்களை விட யோவானைப் பற்றி நமக்கு அதிகம் தெரியும். யோவான் தனது சகோதரர் யாக்கோபுடன் சுவிசேஷங்களில் ”செபெதேயுவின் குமாரர்கள்” என்று குறிப்பிடப்படுகிறார். யோவான் இரண்டாவதாக குறிப்பிடப்படுகிறார், இது அவர் இருவரில் இளையவர் என்பதைக் குறிக்கிறது. மாற்கு 1:14-21 இன் படி, குடும்ப மீன்பிடி வணிகம் கலிலேயா கடலில் கப்பர்நகூமுக்கு அருகில் நடந்தது. வசனம் 20 இன் படி, மற்றவர்களுக்கு வேலை கொடுக்கும் அளவுக்கு வணிகம் செழிப்பாக இருந்தது. இயேசுவின் மரணத்திற்குப் பிறகு, யோவான் 21:1-14 இன் படி வணிகம் இன்னும் வலுவாக இருந்தது.

மாற்கு 15:40 மற்றும் மத்தேயு 27:56 ஐ ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்களுடைய தாயின் பெயர் சலோமி என்றும், அவளும் இயேசுவைப் பின்தொடர்ந்தாள் என்றும் அறிய முடியும். ஒரு சமயம், மத்தேயு 20:21 இன் படி, தன் குமாரர்களுக்கு அவருடைய ராஜ்யத்தில் முன்னுரிமை அளிக்கும்படி இயேசுவிடம் கேட்டாள். ஒரு படி மேலே சென்று, யோவான் 19:25 மற்றும் மத்தேயு 27:56 ஆகியவற்றின் ஒப்பீடு, செபெதேயுவின் குமாரர்களின் தாயான சலோமி உண்மையில் இயேசுவின் தாயான மரியாளின் சகோதரி என்பதைக் குறிக்கலாம். இது யோவானை இயேசுவின் உறவு முறை உடன்பிறவா சகோதரனாக்குகிறது. இது உண்மையாக

இருந்தால், யோவான் 19:25-27 இல் இயேசு சிலுவையில் இருந்து பேசுவது ஏன் என்று விளக்குவதற்கு உதவுகிறது.

மாற்கு 3:17 இல், யாக்கோபு மற்றும் யோவான் "இடிமுழக்க மக்கள்" என்று அழைக்கப்பட்டனர். இது அவர்களின் உக்கிரமான சுபாவத்தைக் குறிப்பதாகத் தெரிகிறது. ஒரு உதாரணத்திற்கு, இயேசு சமாரியாவில் உள்ள ஒரு நகரத்தில் ஒரே இரவில் தங்குவதற்கு முயற்சித்த சந்தர்ப்பத்தை லூக்கா அறிவித்தார். குடியிருப்பாளர்கள் இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் தங்க அனுமதிக்க மறுத்தபோது, யாக்கோபும் யோவானும் கடுமையான கோபத்துடன் நடந்துகொண்டனர். லூக்கா 9:54-56 யை கவனிக்கவும்:

> அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது: "ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா" என்று கேட்டார்கள். இயேசு அவர்களை அதட்டினார், அதன்பின்பு அவர்கள் வேறொரு கிராமத்துக்குப் போனார்கள் (லூக்கா 9:54-56).

இயேசுவோடு இருந்த காலத்தில், யோவானின் உணர்ச்சிகள் வெடிக்கக்கூடிய நிலையில் தான் இருந்தன. அவர் இறுதியில் புதிய ஏற்பாட்டு எழுத்தாளராக ஆனார், மற்ற எதையும் விட, தேவனுடைய அன்பு மற்றும் தேவனுடைய மக்களின் அன்பின் மீது கவனம் செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சில விமர்சகர்கள் நான்காவது சுவிசேஷத்தின் மிகுந்த இரக்க குணம் மற்ற சுவிசேஷங்களில் யோவான் சித்தரிக்கப்படுதுடன் முரண்படுவதாக கருதுகின்றனர். ஆனால் எந்த முரண்பாடும் இல்லை என்பதை இரண்டு சிந்தனைகள் தெளிவுபடுத்துகின்றன. முதலாவதாக, யோவானின் கதை தேவனின் அன்பால் மாற்றப்பட்ட ஒரு மனிதனின் கதையாகும். இயேசுவால் நேசிக்கப்பட்ட யோவான் அன்பின் அப்போஸ்தலனாக மாற்றப்பட்டார். இரண்டாவதாக, தேவன் தீவிரமான மற்றும் உணர்ச்சிவசப்பட்ட யோவானை மாற்றியபோது அவர் அவரை ஒரு மனிதனின் உணர்ச்சியற்ற ஒரு மேல் ஓடாக மாற்றவில்லை. அன்பின் சுவிசேஷத்தின் தீவிர உணர்ச்சிப் பிரசங்கியாக அவரை மாற்றினார். தேவன் தனது இருப்பின் மையத்தை திசை திருப்பி பயன்படுத்தினார், ஆனால் அந்த மையத்தை அழிக்கவில்லை.

சுவிசேஷங்களின் கதையில், பேதுரு மற்றும் யாக்கோபுடன் சீஷர்களின் உள் வட்டத்தில் யோவான் உறுப்பினராக உள்ளார். இயேசுவின் மறுரூபமாதல் மற்றும் கைது செய்யப்பட்ட இரவில் கெத்செமனேயில் நடந்த பிரார்த்தனை போன்ற முக்கியமான நிகழ்வுகளில் அவர்கள் மட்டுமே அவருடன் இருந்தனர். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், பேதுருவும் யோவானும் சீஷர்களின்

இரண்டு தலைவர்கள் ஆவர். மேலும் கலாத்தியர் 2:9 ல், பவுல் யோவானை எருசலேமிலுள்ள சபையின் தூண்களில் ஒன்று என்று அழைத்தார்.

ஆரம்பகால சபையில், ஐரேனியஸ் மற்றும் பல ஆதாரங்கள் மூலம் யோவான் எருசலேமை விட்டு வெளியேறிய பிறகு எபேசுவில் நீண்ட ஊழியத்தை செய்தார் என்பது நிரூபணமாகிறது. யோவான் இறுதியில் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டார் என்று ஒரு வலுவான பாரம்பரியம் உள்ளது. சில ஆதாரங்களின்படி, அவர் பின்னர் நாடுகடத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டு எபேசுவுக்குத் திரும்பினார், முதல் நூற்றாண்டின் இறுதியில் பேரரசர் டிராஜனின் ஆட்சியின் போது அங்கு அவர் மரித்தார்.

யோவான் நான்காவது சுவிசேஷத்தை எழுதினார் என்ற பாரம்பரியக் கண்ணோட்டத்தை இப்போது நாம் உறுதிப்படுத்தியுள்ளோம், மேலும் யோவானின் தனிப்பட்ட வரலாற்றைக் கொஞ்சம் அறிந்திருக்கிறோம், யோவான் சுவிசேஷத்தின் எழுத்தாளருக்கான சந்தர்ப்பத்தை ஆராய்வோம்.

## எழுதப்பட்ட தருணம்

யோவான் சுவிசேஷம் எழுதப்பட்ட சந்தர்ப்பத்தை நான்கு வழிகளில் ஆராய்வோம். முதலில், வாசகர்கள் மற்றும் எழுத்தாளர் இருவரின் புவியியல் இருப்பிடத்தைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, அசல் வாசகர்களின் அடையாளத்தை இன்னும் கொஞ்சம் நெருக்கமாகப் பார்ப்போம். மூன்றாவதாக, எழுத்தாளர் எழுதிய தேதியைக் கருத்தில் கொள்வோம். நான்காவதாக, சுவிசேஷத்தின் நோக்கத்தைப் பற்றி சிந்திப்போம். யோவான் சுவிசேஷத்தின் இருப்பிடத்தை முதலில் பார்க்கலாம்.

### இடம்

யோவான் எபேசுவில் இருந்தபோது தனது சுவிசேஷத்தை எழுதியிருக்கலாம், மேலும் பாலஸ்தீனத்திற்கு வெளியே, ஒருவேளை ஆசியா மைனரில் வாழ்ந்த வாசகர்களுக்காக அவர் அதை எழுதியிருக்கலாம். இந்த விஷயங்களை நாம் உறுதியாக அறிய முடியாது, ஆனால் இந்த முடிவுகளை ஆதரிக்கும் பல காரணிகள் உள்ளன. உதாரணமாக, பாலஸ்தீனிய யூத பழக்கவழக்கங்களைப் பற்றி யோவானின் கருத்துகள் பாலஸ்தீனத்திற்கு வெளியே வாழ்ந்த வாசகர்களை சுட்டிக்காட்டுகின்றன. யோவான் 4:9 இல் யோவான் எழுதியதைக் கவனியுங்கள்:

> சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: "நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம்?" என்றாள் (யோவான் 4:9).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த வசனத்தில், யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையிலான விரோதம் பற்றி யோவான் தனது வாசகர்களுக்கு ஒரு கருத்தைச் சேர்த்துள்ளார். இந்த விரோதம் பாலஸ்தீனத்தில் உள்ள அனைவருக்கும் நன்கு தெரிந்திருக்கும், எனவே யோவானின் கருத்து அவரது வாசகர்கள் வேறு எங்காவது வாழ்ந்ததைக் குறிக்கிறது.

பண்டைய சபையின் எழுத்துக்கள், சுவிசேஷம் முதன்மையாக பாலஸ்தீனத்திற்கு வெளியே உள்ள மக்களுக்கு எழுதப்பட்டதாகக் கூறுகின்றன. யோவான் இந்த சுவிசேஷத்தை ஆசியா மைனரில் உள்ள எபேசுவில் எழுதினார் என்று ஐரேனியஸ் கூறியதை மேற்கோள் காட்டிய யசூபியஸை மேற்கோள் காட்டினோம். ஐரேனியஸ், பாலிகிரேட்ஸ், அலெக்ஸாண்ட்ரியாவின் கிளெமென்ட் மற்றும் கொல்லப்பட்ட ஜஸ்டின் போன்றவர்களுடன் சேர்ந்து கிட்டத்தட்ட அனைத்து பண்டைய சபைகளும் இந்த முடிவுக்கு உடன்பட்டன. மேலும், ஆசியா மைனரில் வசிப்பவர்களைத் தவிர வேறு எந்தக் குழுவுக்கும் இந்த சுவிசேஷம் எழுதப்பட்டதல்லவென்று எந்த பண்டைய ஆதாரமும் கூறவில்லை.

யோவானின் சுவிசேஷத்திற்கும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. யோவான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை எழுதினார், அவருடைய வாசகர்கள் நிச்சயமாக ஆசியா மைனரில் இருந்தனர் - வெளிப்படுத்தின விசேஷம் அதிகாரங்கள் 2-3 இல் உள்ள கடிதங்களால் உரையாற்றப்பட்ட ஏழு சபைகளும் ஆசியா மைனரில் உள்ளன. மேலும் யோவான் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள இணை ஒத்த வாசகர்களின் வலுவான அனுமானத்தை உருவாக்குகிறது. உதாரணமாக, யோவான் சுவிசேஷத்தில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்களுக்கும் யூத ஜெப ஆலயங்களுக்கும் இடையிலான மோதல் தொடர்பான ஒரு சக்திவாய்ந்த போதனை உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமும் இந்த சிக்கலை ஒப்புக்கொள்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 2:9 மற்றும் 3:9 இல் கர்த்தர் தம் சபைக்கு என்ன சொன்னார் என்பதைக் கவனியுங்கள்:

> தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் … சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன் … இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன் (வெளிப்படுத்தின விசேஷம் 2:9; 3:9).

வேறொரு கண்ணோட்டத்தில், அப்போஸ்தலருடைய நடபடிகள் 19:1-இல் இருந்து, யோவான் ஸ்நானகனைப் பின்பற்றுபவர்கள் குறைந்தபட்சம் அதுவரை எபேசுவில் இருந்தனர் என்பதை நாம் அறிவோம். யோவான் ஸ்நானகனைப்

பின்பற்றுபவர்களை உள்ளடக்கிய வாசகர்களுக்கு அப்போஸ்தலனாகிய யோவான் எழுதினால், யோவான் ஸ்நானகன் தன்னை இயேசுவுக்குக் கீழ்ப்படுத்தினான் என்ற சுவிசேஷத்தின் தெளிவான அழுத்தத்தை இது விளக்கக்கூடும்.

இந்த விஷயத்தில் உறுதியாக இருப்பது சாத்தியமற்றது என்றாலும், யோவான் தனது சுவிசேஷத்தை எழுதும் போது எபேசுவில் இருந்ததாகவும், ஆசியா மைனரின் சூழ்நிலைகளால் அது ஒரு பகுதியாக வடிவமைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

சுவிசேஷம் எழுதப்பட்ட இடம் பெரும்பாலும் எபேசு என்று நாம் பரிந்துரைத்துள்ளோம், யோவான் எழுதிய அசல் வாசகர்களின் தன்மையை இன்னும் நெருக்கமாகக் கருத்தில் கொள்வோம்.

## வாசகர்கள்

எல்லா சுவிசேஷங்களையும் போலவே, யோவானின் சுவிசேஷ யுகங்கள் முழுவதும் முழு சபைக்கும் நோக்கம் கொண்டதாக உள்ளது. தேவனுடைய மக்கள் அனைவருக்கும் அது எல்லையற்ற மதிப்பைக் கொண்டுள்ளது. ஆனால் யோவான் சுவிசேஷத்தின் சில பகுதிகளுக்கும் ஒரு குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் சபைக்கும் விசேஷமான பொருத்தம் உள்ளதாகத் தெரிகிறது. குறைந்த பட்சம் சுவிசேஷத்தின் சில பகுதிகளிலாவது, இயேசுவே மேசியா என்று நம்பி வந்த யூத சமூகத்தைச் சேர்ந்தவர்கள், ஆனால் ஜெப ஆலயத்தில் தொடர்ந்து வழிபாடு செய்து வந்தவர்கள் அல்லது யூதர்களுடன் குறிப்பிடத்தக்க தொடர்புகளைக் கொண்டிருந்தவர்கள் என்று யோவான் இவர்களைக் குறிப்பிடுகிறார். உண்மையில், சுவிசேஷத்தின் கிட்டத்தட்ட முழு மையப் பகுதியும், அதிகாரம் 5-12 முதல், இயேசுவுக்கும் யூதர்களுக்கும் இடையேயான கடுமையான மோதலைக் கையாள்கிறது.

யோவான் 70 தடவைகளுக்கு மேல் பயன்படுத்திய "யூதர்கள்" என்ற வார்த்தையை யோவான் பயன்படுத்தியதன் மூலமும் இந்த மோதல் அழுத்தமாகச் சொல்லப்படுகிறது, ஆனால் மற்ற மூன்று சுவிசேஷங்களில் 20 முறைக்கும் குறைவாகவே இது வருகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், இயேசுவுக்கு எதிராக தங்களை அமைத்துக் கொண்ட மதத் தலைவர்களைக் குறிக்க யோவான் இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார்.

இதற்கு நேர்மாறாக, தேவனின் பழைய ஏற்பாட்டு மக்களைப் பற்றி யோவான் சாதகமாகப் பேசும்போது, அவர் பொதுவாக "இஸ்ரவேல்" அல்லது "இஸ்ரவேலர்" போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார். உதாரணமாக, யோவான் 1:47 இல் இயேசு நாத்தான்வேலை "உண்மையான இஸ்ரவேலன்" என்று அழைத்தார்.

மற்ற எந்த சுவிசேஷ எழுத்தாளரை விடவும் யோவான் கிரேக்க வார்த்தையான கிறிஸ்துவை அடிக்கடி பயன்படுத்தினார். ”கிறிஸ்து” என்ற வார்த்தை கிரேக்க வார்த்தையான கிறிஸ்டோஸ் மற்றும் எபிரேய வார்த்தையான மாஷியாக் ஆகிய இரண்டிலிருந்தும் வருகிறது, இவை இரண்டும் அபிஷேகம் செய்யப்பட்டவர் என்று பொருள்படும். கிறிஸ்து தேவனுடைய அபிஷேகம் செய்யப்பட்ட மீட்பர் ஆவார், அவர் இஸ்ரவேலை அவர்களின் பாவங்களிலிருந்து மீட்டு அந்நிய ஆட்சியிலிருந்து விடுவிக்க வந்தார்.

”கிறிஸ்து” என்ற வார்த்தை யூத கிறிஸ்தவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்திருக்கும், ஏனென்றால் ஜெப ஆலயத்திற்கும் வளர்ந்து வரும் கிறிஸ்தவ சபைக்கும் இடையிலான வேறுபாடுகளின் மையமாக அது இருந்தது, இயேசு கிறிஸ்து, நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தேவ மக்களின் இரட்சகர் என்று பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் கூறப்பட்டது.

> யூத மேசியாவிற்கு ”மேசியா” என்ற பட்டம் பிற்காலத்தில் தான் கொடுக்கப்பட்டது, ஆனால் பொல்லாங்கனான சாத்தானையும் அவன் சந்ததியையும் தோற்கடிக்கும் ஸ்திரீயின் **வி**த்திற்கான வாக்குத்தத்தம் ஆதியாகமம் 3:15 இல் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, ஆரம்பத்தில் இருந்து, ஸ்திரீயின் வித்து, அது பின்னர் ஆபிரகாமின் சந்ததியாக இருக்கப் போகிறது என்று தெளிவுபடுத்தப்பட்டது, பின்னர் அவர் யூதாவின் சந்ததியாக இருப்பார் என்று தெளிவுபடுத்தப்பட்டது, மேலும் சர்ப்பம் நியாயந்தீர்க்கப்படும் என்ற வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது, மேலும் ஆபிரகாமின் சந்ததியினரால் அனைத்து தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று கூறப்பட்டது, பின்னர் யூதாவிடம் இருந்து செங்கோல் நீங்காது என்ற வாக்குத்தத்தம் யூதாவுக்கு கொடுக்கப்பட்டது. இந்த வாக்குத்தத்தங்கள் இறுதியில் பிலேயாமின் வாக்கியங்களில் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளன, மேலும் மேசியா பொல்லாங்கனைத் தோற்கடித்து, இறுதியில் ஏதேன் தோட்டத்திற்கான பாதையை மீண்டும் திறந்து, தண்ணீர் கடலை மூடுவது போல வறண்ட நிலங்களை **யே**கோவாவின் மகிமை மூடும் என்பதே தொடக்கத்திலிருந்து தேவனுடைய திட்டம் ஆகும்.
>
> Dr. ஜேம்ஸ் எம். ஹாமில்ட்டன்

யோவான் உரையாற்றிய தலைப்புகள் மற்றும் அவர் உரையாற்றிய விதம் அவரது முதன்மை வாசகர்கள் யூத கிறிஸ்தவர்கள் என்று காட்டுகிறது, அவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுவைப் பின்பற்றுபவர்களாக போராடுகிறார்கள் என்றும் காட்டுகிறது. ஆனால் எல்லா வேதவாக்கியங்களையும் போலவே, பரிசுத்த ஆவியானவர் யோவானின் புத்தகத்தை முழு சபையும் யுகங்கள் முழுவதும் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணினார். உண்மையில், யோவான் 1:41 மற்றும் 4:25 இல், யோவான் தனது பார்வையாளர்களில் புறஜாதிகளுக்கு "மேசியா" என்ற எபிரெய வார்த்தையை மொழிபெயர்த்தார். நிச்சயமாக, யோவான் சுவிசேஷம் யூத மற்றும் புறஜாதி விசுவாசிகளுக்கு மிகவும் மதிப்பு வாய்ந்தது என்பதை வரலாறு நிரூபித்துள்ளது.

இப்போது நாம் சுவிசேஷத்தின் இருப்பிடம் மற்றும் வாசகர்கள் இரண்டையும் பார்த்தோம், இப்போது அதன் தேதியைக் கருத்தில் கொள்வோம்.

## தேதி

பொதுவாக, யோவான் பெரும்பாலும் கி.பி.85 க்கும் 90 க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதியதாகக் கூறலாம். பல காரணிகள் இந்த சுவிசேஷம் கி.பி.85 க்கு முன் எழுதப்படவில்லை என்று காட்டுகின்றன. முதலாவதாக, கி.பி.70 இல் நடந்த எருசலேம் மற்றும் ஆலயத்தின் அழிவு பற்றிய கணிப்புகளை உள்ளடக்காத ஒரே சுவிசேஷம் யோவான் மட்டுமே. அந்தப் பேரழிவு நிகழ்வுக்குப் பின்னர் ஒரு குறிப்பிடத்தக்க காலம் கடந்துவிட்டதால் இது இவ்வாறு இருக்கலாம்.

இரண்டாவதாக, சபைக்கும் ஜெப ஆலயத்திற்கும் இடையிலான பிளவு மிகவும் கசப்பானதாக இருந்த காலத்தை சுவிசேஷம் பிரதிபலிக்கிறது. எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு, யூத மதம் மிகவும் கடினமாகிவிட்டது. தவறான உபதேசத்திற்கு எதிராக தற்காத்துக் கொள்ளும் பொருட்டு, இயேசு தேவ குமாரன் என்று விசுவாசிப்பவர்கள் போன்ற மதவெறியர்கள் மீது சாபத்தை உள்ளடக்குவதற்காக தினசரி ஜெப ஆலய பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன; மற்றும் அதை மீறுபவர்கள் ஜெப ஆலயத்தை விட்டு அடிக்கடி வெளியேற்றப்பட்டார்கள். இந்த பதற்றம் யோவான் 9 போன்ற பகுதிகளில் முன்மாதிரியாக உள்ளது, அங்கு குருடனை இயேசு குணப்படுத்தியதை யோவான் அறிவித்தார். யோவான் 9:22 இல் இந்த சூழ்நிலையில் யோவானின் கருத்தைக் கவனியுங்கள்:

> இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கைபண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்குமுன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள் (யோவான் 9:22).

இந்த வேத பகுதியில், ஜெப ஆலயத்திலிருந்து வெளியேற்றப்படுவது யூத சமூகத்தின் வாழ்க்கையிலிருந்து விலக்கப்பட்டதாக இருந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மூன்றாவதாக, மற்ற மூன்று சுவிசேஷங்களுக்குப் பிறகு யோவான் சுவிசேஷம் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. இந்த பார்வை குறைந்தபட்சம் நான்காம் நூற்றாண்டு வரலாற்றாசிரியர் யசூபியஸ் வரை செல்கிறது. அவரைப் பொறுத்தவரை, யோவான் தனது சுவிசேஷத்தில் மற்ற சுவிசேஷ எழுத்தாளர்கள் எழுதாமல் விட்டதை குறிப்பிட்டார், குறிப்பாக யோவான் ஸ்நானகன் கைது செய்யப்படுவதற்கு முன்பு இயேசுவின் ஊழியத்தைப் பற்றிய தகவல்களைத் தந்தார். யசூபியஸ் *எக்ளசியாஸ்டிக்கல் ஹிஸ்டரி,* புத்தகம் 3, அத்தியாயம் 24, பிரிவு 12 இல் எழுதியதைக் கவனியுங்கள்:

> அதன்படி, யோவான் தனது சுவிசேஷத்தில், யோவான் ஸ்நானகன் சிறையில் தள்ளப்படுவதற்கு முன்பு நிகழ்த்தப்பட்ட கிறிஸ்துவின் செயல்களைப் பதிவு செய்கிறார், ஆனால் மற்ற மூன்று சுவிசேஷகர்களும் அதற்குப் பிறகு நடந்த நிகழ்வுகளைக் குறிப்பிடுகின்றனர்.
>
> நான்கு சுவிசேஷங்களைப் படிக்கும் எவரும், உங்களிடம் மூன்று சுவிசேஷங்கள் இருப்பதைக் கண்டு உடனடியாக நின்று விடுகிறார்கள்: மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகியவை ஒன்றுக்கொன்று மிகவும் ஒத்திருக்கின்றன; அதே பல கதைகள் மீண்டும் மீண்டும் வருகின்றன. இயேசுவின் ஊழியத்தின் அடிப்படையில் அதே அடிப்படை அமைப்பு காணப்படுகிறது. நான்காவது சுவிசேஷமான யோவான் சுவிசேஷம் முற்றிலும் வேறுபட்டது. சபையானது வெளி உலகத்திலிருந்து புதிய சவால்களை எதிர்கொண்டபோது, இந்த யோவான் சுவிசேஷம் முதல் நூற்றாண்டில் மிகவும் பிற்பகுதியில் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது; அவர்களின் யூத எதிரிகளிடமிருந்தும் அவர்களின் மதச்சார்பற்ற எதிரிகளிடமிருந்தும் பல சவால்களை எதிர் கொண்டது. அந்த சவால்கள் நிச்சயமாக ஒரு அர்த்தத்தில் இயேசுவுடன் தொடர்புடையவையாக இருந்தன. யோவானின் சுவிசேஷம் இயேசு உண்மையில் தெய்வீகமானவர் என்பதை மிகவும் வலுவாக வலியுறுத்துவதால், இயேசுவின் தெய்வீகம் தாக்கப்பட்டது தெளிவாகிறது. முதல் மூன்று சுவிசேஷங்களில் இது ஒரு பெரிய பிரச்சனை அல்லாமல் இருந்தது . மற்ற விஷயம் என்னவென்றால், சபையில் தவறான போதனை எழுகிறது, எனவே யோவான் சுவிசேஷம் அந்த தவறான போதனையைப் பற்றி பேசுகிறது. மற்ற மூன்றாவது விஷயம்,

> கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே அந்த நேரத்தில் தெளிவான இடைவெளி ஏற்பட்டு இருந்தது. மத்தேயு, மாற்கு மற்றும் லூக்காவில் நாம் இன்னும் முழுமையாகக் காணாத ஒரு இடைவெளியாக இது இருக்கிறது.
>
> Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

இவை அனைத்தும் சபையின் பழங்கால பாரம்பரியம் ஒருவேளை சரியானது என்ற முடிவுக்கு இட்டுச் செல்கிறது மற்றும் இந்த சுவிசேஷம் யோவானின் வாழ்க்கையில் தாமதமாக எழுதப்பட்டது. அநேகமாக கி.பி.85 க்குப் பிறகு எழுதப்பட்டது.

செபெதேயுவின் குமாரனான யோவான் இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளராக இருந்தால், யோவான் சுவிசேஷத்திற்கான சமீபத்திய சாத்தியமான தேதி அவரது ஆயுட்காலம் எவ்வளவு இருந்திருக்கும் என்பதின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. யோவான் இயேசுவைப் பின்தொடரத் தொடங்கியபோது ஒரு இளைஞனாக இருந்தார். அநேகமாக கி.பி.30 இல் அவர் பின்தொடரத் தொடங்கினார். அந்த நேரத்தில் யோவான் தனது பதின்ம வயதின் பிற்பகுதியில் இருந்திருந்தால் கூட, கி.பி.90 இல் அவருக்கு கிட்டத்தட்ட 80 வயது இருக்கும். அதை விட நீண்ட காலம் வாழ்வது மிகவும் சந்தேகமாக இருந்திருக்கும்.

கி.பி.85 அல்லது 90 என்பது யோவான் சுவிசேஷத்தை எழுதுவதற்கான சமீபத்திய தேதியாகும், இது கையெழுத்துப் பிரதி ஆதாரங்களுடன் ஒத்துப்போகிறது. புதிய ஏற்பாட்டின் மிகப் பழமையான கையெழுத்துப் பிரதியானது *பாப்பிரஸ் 52* என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இது *ரைலண்ட்ஸ் பாப்பிரஸ்* என்றும் அழைக்கப்படுகிறது. இந்த பிரதி யோவான் 18 இன் ஒரு பகுதியைக் கொண்டுள்ளது.

*பாப்பிரஸ் 52* கி.பி.100 மற்றும் 150 க்கு இடையில் தேதியிடப்பட்டுள்ளது. இந்த சிறிய பகுதி முதலில் ஒரு முழு சுவிசேஷத்தின் ஒரு பகுதியாக இருந்ததாகக் கருதினால், இது இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மிகவும் பரவலாக விநியோகிக்கப்படும் அளவுக்கு முன்னதாகவே எழுதப்பட்டது என்பதைக் குறிக்கிறது.

இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுவிசேஷத்தின் மற்ற கையெழுத்துப் பிரதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த கையெழுத்துப் பிரதிகள் அனைத்தும் எகிப்தைச் சேர்ந்தவை மற்றும் இவை வெவ்வேறு கையெழுத்துப் பிரதி மரபுகளைக் குறிக்கின்றன. ஆசியா மைனரிலிருந்து எகிப்து வரையிலான இந்தப் புவியியல் போக்குவரமும், கையெழுத்துப் பிரதி பாரம்பரியத்தின் பல்வகைப்படுத்தலும் 40 அல்லது 50 ஆண்டுகளுக்குள் நடந்திருக்குமா என்பது

சந்தேகமே. எனவே, யோவான் சுவிசேஷத்தை கி.பி.90 அல்லது 100 இல் எழுதுவதற்கான சமீபத்திய தேதியை அமைப்பது நியாயமானதாகத் தெரிகிறது.

இப்போது யோவான் சுவிசேஷத்தின் இடம், வாசகர்கள் மற்றும் தேதியைப் பரிசீலித்தோம், யோவான் சுவிசேஷத்தை எழுதுவதற்கான நோக்கத்தில் இப்போது கவனம் செலுத்துவோம்.

## நோக்கம்

புதிய ஏற்பாட்டில் கணிசமான அளவுள்ள அனைத்து புத்தகங்களும் சிக்கலான நோக்கங்களைக் கொண்டுள்ளன, யோவான் சுவிசேஷம் அதிலிருந்து வேறுபட்டதல்ல. இயேசு தனது ஊழியத்தின் போது கணிசமான எண்ணிக்கையிலான கருப்பொருள்களைக் கையாண்டது போலவே, இயேசுவின் ஊழியத்தைப் பற்றிய யோவானின் பதிவும் பல விஷயங்களைக் குறிக்கிறது. ஆனால் இந்த நோக்கங்களை ஒரு ஒருங்கிணைந்த முறையில் விவரிக்க இன்னும் சாத்தியம் உள்ளது. உண்மையில், யோவான் தாமே நமக்கான தனது நோக்கத்தை சுருக்கமாகக் கூறினார். குறிப்பாக, இயேசு கிறிஸ்து மற்றும் தேவனுடைய குமாரன் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்த விரும்புவதாக அவர் கூறினார். யோவான் 20:30-31 இல் யோவான் எழுதியிருப்பதை கவனியுங்கள்:

> இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:30-31).

எளிமையாகச் சொன்னால், இந்த சுவிசேஷத்தை விசுவாசிப்பதன் மூலம் வரும் நன்மைகளைப் பெறுவதற்காக, இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அவருடைய வாசகர்கள் விசுவாசிப்பார்கள் என்று யோவான் எழுதினார்.

> சுவிசேஷம் எழுதப்பட்டதற்கான காரணத்தை யோவான் மிகவும் வெளிப்படையாகக் கூறுகிறார். யோவான் 20:31 இல், இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்பதை நாம் அறிந்துகொள்ளவும், விசுவாசித்தால் அவரில் நித்திய ஜீவனைப் பெறவும் இவைகள் எழுதப்பட்டதாக அவர் கூறுகிறார். அது இரண்டு மடங்கு நோக்கம் என்று சொல்லலாம். முதலாவதாக, அவரது சுவிசேஷம் சுவிசேஷ செய்தியாக இருப்பதுடன் தொடர்புடையது. வெளிப்படையாக, அவர் தனது வாசகர்கள்

> கடைபிடிக்க வேண்டும் என்று எழுதியுள்ளார், தேவன் அவர்களை தன்னிடமாக இழுத்ததால் அவரில் விசுவாசிக்க வேண்டும். பின்னர் இரண்டாவதாக, அது சத்தியத்தை தற்காக்கும் தன்மை கொண்டது. இயேசு உண்மையில் அவதாரமான தேவ-மனிதர் என்பதை அவர் தனது வாசகர்களை நம்ப வைக்க விரும்பினார்.
>
> Rev. லேரி காக்ரெல்

> நீங்கள் இயேசுவின் அடையாளத்தை அறிந்து கொள்வதற்காக இந்த சுவிசேஷத்தை எழுதுகிறேன் என்று யோவான் கூறுகிறார். இயேசு தேவனுடைய குமாரன் ஆவார். மேலும் அவர் தேவ குமாரன் யார் என்றும், அவர் பிதாவுடன் இருந்து மாம்சமாக மாறிய வார்த்தை என்றும், இயேசு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்றும் அவர் விளக்குகிறார், இது நாம் ஒப்புக்கொள்ளும் சில சுருக்கமான தகவல்கள் அல்ல. பிதா இலவசமாகக் கொடுக்கும் வாழ்க்கையை நீங்கள் பெறும்படிக்கு என் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார்.
>
> Dr. ராபர்ட் எல். ப்ளம்மர்

அவருடைய சுவிசேஷம் முழுவதும், யோவானின் நோக்கத்தின் மையக் கவனம் இயேசுவை மேசியாவாகவும் தேவனின் குமாரனாகவும் விசுவாசிக்க வேண்டும் என்பதை ஊக்குவிப்பதாக இருந்தது. யூத கிறிஸ்தவர்களுக்கு ஜெப ஆலயத்துடனான மோதல்களில் அதிக ஆதரவு தேவைப்படும் இரண்டு காரியங்கள் இவை. அவர்கள் இயேசுவை கிறிஸ்து மற்றும் தேவனின் குமாரன் என்று நம்பினர், மேலும் அவர்கள் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெற வேண்டுமானால் இந்த நம்பிக்கையில் நிலைத்திருக்க வேண்டும். நிச்சயமாக, யோவானின் சுவிசேஷம் அனைத்து விசுவாசிகளுக்கானது என்ற உணர்வும் உள்ளது. உதாரணமாக, யோவான் 13-17 இல், இயேசு இனி பூமியில் நடக்கவில்லை என்றாலும், பரிசுத்த ஆவியின் மூலம் தம்முடைய மக்களின் வாழ்க்கையில் அவர் ஒரு தற்போதைய நிஜமாக இருந்தார் என்பதை வலியுறுத்தி அனைத்து விசுவாசிகளின் விசுவாசத்தையும் வளர்க்க யோவான் முயன்றார். யோவானின் அனைத்து போதனைகளும் அனைத்து விசுவாசிகளின் வாழ்க்கையையும் வளப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

யோவானின் சுவிசேஷம் “குழந்தைகள் விளையாடுகிறதும் யானைகள் நீந்துகிறதுமான ஒரு குளம்” என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். அதன் அடிப்படை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செய்தி தெளிவானதும் எளிமையானதுமாகும்: இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து ஆவார். ஆனால் இந்த அடிப்படைச் செய்தியின் விவரங்கள் பல ஆண்டுகளாக சுவிசேஷத்தைப் படித்த மொழிபெயர்ப்பாளர்களுக்கு சவால் விடுகின்றன.

இந்த சுவிசேஷத்தைப் படித்த முதல் கிறிஸ்தவர்கள் அதை ஆழமாக ஊக்கமடைந்திருப்பார்கள். எதிரிகளுடனான மோதல்கள் இருந்தபோதிலும், கிறிஸ்தவ நம்பிக்கையில் நிலைத்திருக்க அவர்களுக்கு அது கற்பித்திருக்கும். மேலும், நிறைந்த வாழ்வுக்கான ஒரே ஆதாரமாக இருந்த கிறிஸ்துவின் மீதான அவர்களின் அன்பிலும் பிரமிப்பிலும் வளர இது அவர்களுக்கு சவாலாக இருந்திருக்கும். யோவானின் சுவிசேஷம் நவீன கிறிஸ்தவர்களுக்கும் இதே போன்ற ஊக்கங்களையும் சவால்களையும் வழங்குகிறது.

இப்போது நாம் யோவான் சுவிசேஷத்தின் பின்னணியைப் படித்தோம், இப்போது இந்த புத்தகத்தின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தைப் பற்றிப் பார்ப்போம்.

# அமைப்பு மற்றும் உள்ளடக்கம்

யோவான் சுவிசேஷத்தின் கட்டமைப்பை அறிஞர்கள் பல்வேறு வழிகளில் விவரித்துள்ளனர். இந்தப் பாடத்தில், இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியம் பற்றிய யோவானின் அறிமுகச் சுருக்கம் மற்றும் யோவான் புத்தகத்தின் உள்ளடக்கம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பைப் பரிந்துரைத்தவற்றைப் பின்பற்றுவோம். 1:10-14 லிருந்து இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்... அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவான் 1:10-14).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த பகுதி நான்கு முக்கிய காரியங்களில் கவனம் செலுத்துகிறது: இயேசு உலகிற்கு வந்தார்; அவர் வந்து தனது சொந்த இஸ்ரவேல் மக்களால் நிராகரிக்கப்பட்டார்; அவரை ஏற்றுக்கொண்டு விசுவாசித்தவர்கள் தேவனுடைய பிள்ளைகளானார்கள்; பின்னர் அந்த விசுவாசிகள் இயேசுவின் சாட்சிகளாக ஆனார்கள். அந்த நான்கு முக்கிய யோசனைகளைப் பின்பற்றி, யோவான் சுவிசேஷத்தை இவ்வாறு சுருக்கப்படுத்திக் கூறுவோம்:

முதலில், யோவான் 1:1-18 இல் இயேசுவின் அவதாரத்தை விவரிக்கும் ஒரு சுருக்கமான அறிமுகத்துடன் தனது சுவிசேஷத்தை ஆரம்பித்தார்.

இரண்டாவதாக, யோவான் இயேசுவின் பொது ஊழியத்தை 1:19-12:50 இல் பதிவு செய்தார், அங்கு இயேசு தம்முடைய சொந்த ஜனங்களுக்காக வந்தார் என்றும், அவர் இரட்சிக்க வந்த மனித இனத்தால் நிராகரிக்கப்பட்டார் என்றும் காட்டினார்.

மூன்றாவதாக, யோவான் 13:1-20:31 இல் இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசித்தவர்களுடன் இயேசுவின் தனிப்பட்ட ஊழியத்தின் விளக்கத்தை சேர்த்தார்.

நான்காவதாக, 21:1-25 இல் யோவான் சுவிசேஷத்தின் முடிவில், இயேசுவின் மகிமைக்கு சாட்சிகளாக அப்போஸ்தலர்கள் மற்றும் பிற சீஷர்களின் பங்கை யோவான் எடுத்துரைத்தார்.

யோவானின் கூற்றுப்படி, சுவிசேஷத்தின் இந்த ஒவ்வொரு பகுதியையும் அதன் முன்னுரையில் இருந்து பார்ப்போம்.

## முன்னுரை

1:1-18 இல் யோவான் வல்லமையாகவும் அழகாகவும் முழு சுவிசேஷத்தையும் சுருக்கமாகக் கூறினார். இயேசுவே எல்லாவற்றையும் படைத்த தேவனின் வார்த்தை என்றும், எல்லா உயிர்களுக்கும் ஆதாரமானவர் என்றும் அவர் போதித்தார். ஆனால் இதை விட, இயேசு மாம்சமும் இரத்தமும் கொண்ட உண்மையான மனிதனாக உலகிற்கு வந்தார். தேவ அவதாரமாக வந்து, அவர் உருவாக்கிய உலகத்திற்கு பிதாவின் மகிமையை வெளிப்படுத்தினார்.

இதை யோவான் யோவான் 1:4-5 இல் இயேசுவே இருண்ட உலகத்திற்கு வந்த வெளிச்சம் என்று விவரித்தார். தேவனுடைய கிருபையின் ஒரே முழு வெளிப்பாடாக அவர் அந்த இருளை வென்றார். இயேசு அவதாரம் எடுத்த போது அவரது மகிமை மறைக்கப்பட்டதைப் பற்றி வேதாகமம் சில சமயங்களில் பேசுகையில், இயேசுவின் அவதாரம் உண்மையில் அவரது மகிமையை முக்கியமான வழிகளில் தெரியப்படுத்தியது என்ற உண்மையை யோவான் எடுத்துரைத்தார். இயேசுவினுடைய மகிமையை மறைக்காமல், மனிதனாக அவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவதாரம் எடுத்தது உண்மையில் அவருடைய மகிமையை வெளிப்படுத்தியது. யோவான் யோவான் 1:14 இல் இவ்வாறு எழுதினார்:

> அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவான் 1:14).

# இயேசுவின் பொது ஊழியம்

முன்னுரையைத் தொடர்ந்து, யோவான் 1:19-12:50 இல் இயேசுவின் பொது ஊழியத்தைப் பதிவு செய்தார். இந்தப் பகுதியில், இயேசு தனது சொந்த ஜனங்களான இஸ்ரவேல் தேசத்திற்கு வந்தார் என்பதையும், இஸ்ரவேல் மக்கள் இயேசுவை தங்கள் கிறிஸ்து மற்றும் கர்த்தராக நிராகரித்ததையும் யோவான் பேசினார். யோவான் 1:11 இல் நாம் பார்த்தபடி, யோவான் இவ்வாறு கூறினார்:

> அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவான் 1:11).

இந்த சுருக்கத்திற்கு முக்கியமான விதிவிலக்குகள் இருந்தாலும், யோவான் சுவிசேஷத்தில் இயேசுவின் பொது ஊழியத்திற்கு இஸ்ரவேல் தேசம் பொதுவாக இப்படித்தான் பதிலளித்தது.

இயேசுவின் பொது ஊழியத்தைப் பற்றிய நம் ஆய்வு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்படும், அவருடைய ஊழியத்திற்கான ஆயத்தத்தில் தொடங்கி, ஆறு வெவ்வேறு யூதர்களின் பண்டிகைகளைச் சுற்றியுள்ள நிகழ்வுகள் வரை தொடரும். யோவான் 1:19-2:12 இல் இயேசுவின் ஊழியத்திற்கான ஆயத்தத்தை முதலில் பார்ப்போம்.

## ஊழியத்திற்கான ஆயத்தம்

யோவான் 1:19-36 இல் உள்ள யோவான் ஸ்நானகனின் ஊழியத்துடன் இயேசுவின் ஊழியத்திற்கான ஆயத்தம் பற்றிய பகுதி தொடங்குகிறது. இந்த பகுதியில், யோவான் ஸ்நானகன் இயேசு தேவ குமாரன் என்பதற்கு ஒரு முக்கிய சாட்சி என்றும், உலகத்தின் பாவத்தை நீக்கும் தேவ ஆட்டுக்குட்டியாக இயேசு இருப்பார் என்றும் யோவான் வலியுறுத்தினார்.

இதைத் தொடர்ந்து, யோவான் 1:37-51 இல் இயேசுவின் முதல் சீஷர்கள் அழைக்கப்பட்டதை யோவான் அறிவித்தார். யோவான் ஸ்நானகனின் விவரத்தைப் போலவே, இந்தப் பகுதியிலும் இயேசுவின் அடையாளம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வலியுறுத்தப்படுகிறது. அவருடைய சீஷர்கள் அவரை ”ரபீ” என்று குறிப்பிடுகின்றனர், அதாவது 38 வது வசனத்தில் ஆசிரியர் என்று பொருள்படும்; ”மேசியா,” அதாவது வசனம் 41 இல் கிறிஸ்து என்று அர்த்தம் ஆகும்; 45 ஆம் வசனத்தில் “மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிரவரை” மோசே முன்னறிவித்த தீர்க்கதரிசியைப் பற்றிய குறிப்பு உள்ளது; மற்றும் வசனம் 49 இல் ”தேவ குமாரன்” மற்றும் அதற்கு இணையான வார்த்தையான ”இஸ்ரவேலின் ராஜா”என்று உள்ளது. இறுதியாக, வசனம் 51 இல், தேவனின் பிரசன்னத்திற்கு அணுகலை வழங்குவதற்காக அனுப்பப்பட்ட ”மனுஷகுமாரன்” என்று இயேசு தன்னை அடையாளப்படுத்தினார்.

ஊழியத்திற்கான இயேசுவின் ஆயத்தத்தின் கடைசிப் பகுதி அவர் செய்த முதல் அற்புதமாகும், இதை யோவான் 2:1-12 இல் பதிவு செய்தார். இயேசு தண்ணீரை திராட்சைரசமாக மாற்றிய சந்தர்ப்பம் இது. ஆனால் கவனம் அற்புதத்தின் மீது இல்லை. யோவான் 2:11 இல் யோவான் எழுதியதைக் கவனியுங்கள்:

> இயேசு கலிலேயாவிலுள்ள கானாவில் நிகழ்த்திய அற்புத அடையாளங்களில் இதுவே முதன்மையானது. இயேசு தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் (யோவான் 2:11).

இந்த அற்புதம் இயேசுவின் மகிமையை வெளிப்படுத்தும் ஒரு அடையாளம் என்றும், அவருடைய சீஷர்கள் அவரை நம்ப வைத்தது என்றும் யோவான் கூறிய முக்கியக் குறிப்புகளில் ஒன்றாகும்.

> ”அடையாளங்கள்” என்ற சொல் யாத்திராகமம் புத்தகத்தில் மோசே செய்யும் அற்புதங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது, குறிப்பாக வாதைகளைக் குறிப்பதாக நான் யூகிக்கிறேன். எனவே அறிகுறிகள் ஏற்கனவே உள்ளன, அல்லது ”அடையாளம்” என்ற சொல் ஏற்கனவே அற்புதங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது, அவர் அடிக்கடி இயேசுவை மோசேயுடன் ஒப்பிடுகிறார், யாத்திராகமம் புத்தகத்தின் எழுத்தாளரைப் போலவே, அற்புதங்கள் மக்களுக்கு எதையாவது காட்டுவதற்காக கொடுக்கப்பட்டன, குறிப்பாக தேவன் மக்களுக்கு ஏதாவது சொல்கிறார் என்று நீங்கள் சொல்லலாம். மற்றும் மக்கள் அதற்கு பதிலளிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. யோவான் இதைத் தான் செய்கிறார் என்று நான் நினைக்கிறேன்.
>
> Dr. டேவிட் ஏ. ரெடலிங்ஸ்

”செமியோன்” - ”அடையாளங்கள்” என்று மொழிபெயர்க்கப்பட்ட இயேசுவின் அற்புதங்களை தொடர்ந்து அழைப்பதில் யோவான் சுவிசேஷங்களில் தனித்துவமானவர். அற்புதங்களைப் பார்பதற்காக அல்ல, அவைகளைத் தாண்டி இயேசுவைச் சுட்டிக்காட்டுவதே அற்புதங்களின் நோக்கமாகும். குறிப்பாக யோவான் 20:30-31 இல் யோவான் சுருக்கமாகக் கூறிய புத்தகத்தின் நோக்கத்திற்கு ஏற்ப இயேசுவை ”கிறிஸ்து” மற்றும் ”தேவ குமாரன்” என்று அடையாளம் காணும் நோக்கத்தில் இருந்தனர்.

> இயேசுவின் அற்புதங்களால் பலர் பயனடைந்தனர், ஆனால் உண்மையில் கண்கள் திறக்கப்பட்டவர்கள் அவர்கள் சுட்டிக்காட்டியதை, அதாவது கிறிஸ்துவின் அடையாளத்தைப் பார்க்க முடிந்தது. எனவே, யோவான் அற்புதங்களைப் பற்றி பேசும் ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார் என்று நான் நினைக்கிறேன், அது பெரிய அதிசய நிகழ்வுகளாக மட்டும் இல்லாமல், உண்மையில் தங்களைத் தாண்டி கிறிஸ்துவின் அடையாளத்தை சுட்டிக்காட்டுகிறது. நிச்சயமாக, அதனால்தான் அவர் எழுதியதாக யோவான் கூறுகிறார், இயேசுவே கிறிஸ்து என்று நீங்கள் நம்பலாம் என்றும், அவருடைய நாமத்தில் நீங்கள் ஜீவனைப் பெறுவீர்கள் என்றும், அந்தச் செயல்பாட்டின் அந்த அடையாளங்கள் அந்தச் செயலைச் செய்கின்றன என்றும் நம்புகிறீர்கள்.
>
> Rev. Dr. சைமன் வைபர்ட்

> ஒரு அடையாளம் என்பது இயேசுவின் உண்மையான அடையாளத்தைச் சுட்டிக்காட்டும் ஒன்று. ஒரு அதிசயப் படைப்பின் பொருள் மட்டத்தில் நீங்கள் அதை வெறுமனே புரிந்து கொண்டால், தண்ணீரை திராட்சைரசமாக மாற்றுகிறதையும், கூட்டத்திற்கு அற்புதமாக அப்பத்தை கொடுக்கிறதையும், பார்வையற்றவரைக் குணப்படுத்துகிறதையும் நீங்கள் தவறாக புரிந்து விடுவீர்கள். யோவான் சுவிசேஷம் முழுவதிலும், இவைகளை நீங்கள் தேவ நோக்கமாகப் பார்த்தால், இவை வெறும் அற்புதங்கள் அல்ல, ஆனால் இவை இயேசுவினுடைய அடையாளத்தின் உண்மையான வெளிப்பாடாகும்; அவர் ஜீவ அப்பம் ஆவார். அவர் நமக்குப் பார்வை கொடுக்க வந்தவர் ஆவார்; அவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வரவிருக்கும் யுகத்தின் புதிய திராட்**சை** ரசத்தைக் கொண்டுவருகிறார், நாம் அதைக் கொண்டாடுகிறோம்.
>
> Dr. ராபர்ட் எல். ப்ளம்மர்

## முதல் பஸ்கா

இயேசுவின் பொது ஊழியத்தைப் பற்றிய இரண்டாவது பகுதி எருசலேமில் ஒரு பஸ்கா கொண்டாட்டத்தை மையமாகக் கொண்டது. யோவான் சுவிசேஷத்தில் குறிப்பாகப் பெயரிடப்பட்ட முதல் பஸ்கா என்பதால் இதை முதல் பஸ்கா என்று குறிப்பிடுவோம். இந்த பகுதி யோவான் 2:13–4:54 வரை நீண்டுள்ளது.

யோவான் 2:13-25 இல் உள்ள வியாபாரிகளை விரட்டி இயேசு ஆலயத்தைச் சுத்தப்படுத்துவதைப் பற்றிய யோவானின் கதையுடன் இந்தப் பகுதி தொடங்குகிறது. மீண்டும், இயேசுவின் அடையாளத்தின் மீது கவனம் செலுத்தப்பட்டது. யோவான் 2:18 இல் யூதர்கள் இயேசுவிடம் கேட்டதைக் கவனியுங்கள்:

> அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: ”நீர் இவைகளைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர்?” என்று கேட்டார்கள் (யோவான் 2:18).

இயேசு தம்முடைய சொந்த மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை முன்னறிவிப்பதன் மூலம் பதிலளித்தார், இது அவர் தேவனுடைய குமாரன் என்பதற்கு மிகப்பெரிய அடையாளமாக இருக்கும். 2:21-25 இல் காணப்படும் இந்த அறிக்கைக்குப் பிறகு, யோவான் தனது கருத்துக்களில், இயேசுவும் பல அடையாளங்களை முன்னறிவித்தார் என்றும், இதன் விளைவாக பலர் அவருடைய பெயரை குறைந்தபட்சம் மேலோட்டமாக விசுவாசித்தனர் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து, யூதர்களின் ஆளும் குழுவின் உறுப்பினரான நிக்கொதேமுவுடனான இயேசுவின் அற்புதமான உரையாடலை யோவான் 3:1-21 இல் யோவான் அறிவித்தார். மீண்டும், இயேசுவின் அடையாளத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது, இந்த முறை ”மனுஷகுமாரன்” மற்றும் ”தேவ குமாரன்” மற்றும் அவர் நிறைவேற்றுவதற்காக அனுப்பப்பட்ட இரட்சிக்கும் பாத்திரம் ஆகியவற்றைக் குறித்ததான அடையாளத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

யோவான் 3:22-36 இல், யோவான் ஸ்நானகனைப் பற்றிய மற்றொரு பதிவைக் காண்கிறோம். இதில், இயேசு கிறிஸ்துவே, தேவ குமாரன் என்று யோவான் வலியுறுத்தினார். தேவன் மற்றும் இரட்சிப்பைப் பற்றி சாட்சிமளிக்க

இயேசு வந்ததாக அவர் கூறினார், ஆனால் கிட்டத்தட்ட யாரும் அவரை விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்ளவில்லை.

யோவான் 4:1-42 இல், சமாரியாவில் ஒரு கிணற்றில் ஒரு சமாரிய ஸ்திரீயை இயேசு சந்தித்ததாக யோவான் அறிவித்தார். மீண்டும், கிறிஸ்து என்று அழைக்கப்படுகிற மேசியாவாக இயேசுவின் மீதான அடையாளம் முக்கியப்படுத்தப்படுகிறது. அவர் வந்து தனது மக்களுக்கு எல்லாவற்றையும் விளக்குவார். இரட்சிப்பு யூதர்கள் மூலமாகவும், குறிப்பாக தம் மூலமாகவும் வரும் என்று வலியுறுத்துவதன் மூலம், இயேசு அவளுடைய சிந்தனை முறையை சவால் செய்தார், மேலும் அவள் எப்போதும் விரும்பிய தேவனுடைய வாழ்க்கையையும் யதார்த்தத்தையும் அவரில் காண அவளை அழைத்தார். பல சமாரியர்கள் இயேசுவை விசுவாசித்து இந்த போதனையை ஏற்றுக்கொண்டனர்.

இறுதியாக, யோவான் 4:43-54 இல், யோவான் இயேசுவின் இரண்டாவது அற்புத அடையாளத்தை அறிவித்தார். முதல் அடையாளத்தைப் போலவே இதுவும் கானாவில் நடந்தது. ஆனால் இந்த முறை இயேசு ஒரு குழந்தையைத் தொடாமலும் பார்க்காமலும் குணப்படுத்தினார். ஆச்சரியப்படுவதற்கில்லை, இந்த அற்புதம் இயேசுவின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கம் கொண்டது மற்றும் அதைக் கண்டவர்கள் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியது என்ற உண்மையை வலியுறுத்துகிறது.

முதல் பஸ்காவைக் கையாளும் பகுதி முழுவதும் இயங்கும் ஒரு முக்கியமான கருப்பொருள் விசுவாசம் ஆகும். முதல் அடையாளத்திற்குப் பிறகு, சீஷர்கள் இயேசுவை விசுவாசித்தார்கள் என்று யோவான் 2:11 இல் அறிவித்தார். 4:42 இல், இயேசுவினுடைய போதனையின் காரணமாக சமாரியர்கள் விசுவாசித்தனர். மேலும் 4:53 இல், குணமடைந்த சிறுவனின் குடும்பத்தினர் விசுவாசித்தனர். பின்னர், யோவான் 7:50 மற்றும் 19:39 இல், நிக்கொதேமுவும் இயேசுவின் விசுவாசி ஆனார் என்று நினைப்பதற்கான காரணத்தைக் காண்கிறோம். இயேசுவின் அடையாளங்களும் ஆழமான போதனைகளும் அவருடைய அடையாளம் மற்றும் அவர் வழங்கிய இரட்சிப்புக்கு வலிமையான சாட்சிகளாக இருந்தன, மேலும் பலர் அவர் மீது விசுவாசம் வைத்தனர்.

> நிச்சயமாக, யோவான் சுவிசேஷத்தின் முக்கிய கருப்பொருள்களில் ஒன்று இரட்சிக்கிற விசுவாசம் ஆகும்; விசுவாசிக்க வேண்டும் என்பது சுவிசேஷம் முழுவதும் வலியுறுத்தப்படுகிறது. அதன் முக்கியத்துவம் இரண்டு பகுதிகளில் வைக்கப்படுகிறது ஒன்று விசுவாசம், அல்லது தேவனின் பிள்ளையாக மாறுவது, தேவனின் செயல், மற்றொன்று, இது தனிப்பட்ட இரட்சிக்கிற விசுவாசத்தின் மூலம் ஒருவர் தேவனிடம் வருவது தேவனுடைய ஈவாகும், அது நம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாழ்வில் தேவனின் கிருபை என்று நாம் நம்புகிறோம். ஆனால் அது நாம் செய்யும் ஒன்றை அடிப்படையாகக் கொண்டது, எனவே அறிவின் அம்சம் அதில் இருக்க வேண்டும். கிறிஸ்து நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என்ற புரிதல் இருக்க வேண்டும். நாம் ஒப்புக்கொள்ளும்படியான சம்மத உணர்வும் இருக்க வேண்டும். ஆனால் இது தெரிந்துகொள்வதையும் ஒப்புக்கொள்வதையும் விட அதிகமாகும். நம்பிக்கை உணர்வு உள்ளது, அதுவே விசுவாசத்தின் முக்கிய அம்சமாகும். தேவன் தனது குமாரனாகிய கிறிஸ்து மூலம் செய்த அனைத்தையும் அடையும் தனிமனிதனின் வெறுமையான கை இது.

Dr. ஜெப் லோமேன்

உங்களுக்குத் தெரியும், நம்மைச் சுற்றியுள்ள உலகில் மிகவும் வெறுப்பூட்டும் விஷயங்களில் ஒன்று, ”விசுவாசம்” என்ற வார்த்தை மிகவும் சாதாரணமாகவும் மிகவும் கவனக்குறைவாகவும் பயன்படுத்தப்படுகிறது. விசுவாசத்தில் விசுவாசம் உள்ளவர்கள் என அடிப்படையில் விசுவாசம் பற்றி பேசுபவர்கள் ஏராளம். விசுவாசத்தைப் பற்றி கிறிஸ்தவர்கள் பேசுவது அப்படியல்ல. எல்லா வகையான வெவ்வேறு விசுவாசங்களும் உள்ளன. நான் இப்போது ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கிறேன். அது என்னை நிலைநிறுத்தப் போகிறது என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கை உள்ளது. இந்த நாற்காலியில் எனக்கு விசுவாசம் உள்ளது. இருப்பினும், என்னைத் தாங்குவதைத் தவிர வேறு எதையும் செய்ய இந்த நாற்காலியில் எனக்கு விசுவாசம் இல்லை. இது வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படாது. இரட்சிக்கும் விசுவாசத்தைப் பற்றி நாம் பேசும்போது, அது கிறிஸ்துவின் மீதான விசுவாசம் ஆகும். கிறிஸ்து நம் இரட்சிப்புக்குத் தேவையான அனைத்தையும் செய்திருக்கிறார் என்பது அந்த நம்பிக்கையில் நம்பிக்கை வைப்பதும் ஒய்வெடுப்பதுவாகும். இரட்சிக்கும் விசுவாசம் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் ஆகும், நம்முடைய பாவத்திற்கு தண்டனை கொடுத்தவர் கிறிஸ்து **என்று**ம், நம்முடைய இரட்சிப்பை வாங்கியவர் கிறிஸ்து என்றும், நம்முடைய பாவங்களுக்கு முழு பரிகாரம் செய்தவர் கிறிஸ்து என்றும் தெரிந்து இருக்கிறோம், அவருக்குள் நம்முடைய பாவங்களுக்கு முழு மன்னிப்பு உண்டு. கிறிஸ்து நமக்காக

> இதைச் செய்தார் என்பதையும், இனி செய்ய வேண்டியது எதுவுமில்லை என்பதையும், விசுவாசத்தால் தம்மிடம் வருபவர்களை என்றென்றும் காத்துக்கொள்வதையும் அறிந்து, அவர்மீது இளைப்பாறி நம்பிக்கை வைப்பதே இரட்சிக்கும் விசுவாசம் ஆகும். இரட்சிக்கிற விசுவாசம் என்பது ஒரு தனித்துவமான அர்த்தத்தில் இயேசுவின் மீது விசுவாசம் வைப்பது ஆகும். எங்களுக்கு வேறு எதுவும் இருக்காது. வேறு எதையும் நாங்கள் விரும்புவதும் கிடையாது. நம் இரட்சிப்புக்கு கிறிஸ்து போதுமானவர் என்பதை நாம் அறிவோம்.
>
> Dr. ஆர். ஆல்பர்ட் மோஹ்லர், Jr.

துரதிர்ஷ்டவசமாக, எல்லோரும் இயேசுவுக்கு விசுவாசத்தில் பதிலளிக்கவில்லை. 2:12-20 இல், ஆலயத்தை அசுத்தப்படுத்தியவர்களை இயேசு துரத்தினார். 2:24-25 இல், இயேசு பலரிடம் தன்னை ஒப்படைக்கவில்லை, ஏனென்றால் அவர்களுக்கு உண்மையான விசுவாசம் இல்லை என்பதை அவர் அறிந்திருந்தார். மேலும் 3:18-21 இல், விசுவாசிக்க மறுப்பவர்களுக்கு எதிராக வரும் நியாயத்தீர்ப்பைப் பற்றி வாசிக்கிறோம்.

## பெயரிடப்படாத பண்டிகை

இயேசுவின் பொது ஊழியத்தின் மூன்றாவது பகுதி பெயரிடப்படாத பண்டிகையுடன் தொடர்புடையது, இது யோவான் 5:1-47 இல் காணப்படுகிறது. 1-15 வசனங்களில், 38 வருடங்களாக வியாதியாயிருந்த ஒருவரை இயேசு குணப்படுத்தினார். ஆனால் அது ஓய்வுநாள் என்பதால், ஓய்வுநாளில் வேலை செய்யக்கூடாது என்கிற சட்டத்தை மீறியதற்காக யூதர்களால் இயேசு தண்டிக்கப்பட்டார். யோவான் 5:16-47 இயேசு என்ன பதிலளித்தார் என்பதைப் பதிவுசெய்கிறது, அங்கு அவர் தம்மை விசுவாசிக்கிற அனைவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுப்பவர் என்று கூறினார்.

## இரண்டாம் பஸ்கா

இயேசுவின் பொது ஊழியத்தை விவரிக்கும் நான்காவது பகுதி, யோவான் 6:1-71 இல் அவர் இரண்டாவது பஸ்கா பண்டிகையைக் கடைப்பிடித்ததைப் பற்றி நமக்குச் சொல்கிறது. எகிப்திலிருந்து இஸ்ரவேல் வெளியேறியதை யூதர்கள் கொண்டாடிய பண்டிகையாக பஸ்கா இருந்தது. எனவே, இந்த பிரிவில் யாத்திராகமம் பற்றிய பல குறிப்புகள் உள்ளன என்பதில் ஆச்சரியமில்லை. 6:1-15 இல், இயேசு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் மட்டும் கொண்டு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஐயாயிரம் பேருக்கு அற்புதமாக போஷித்தார். இஸ்ரவேல் தேசம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு தேவன் அவர்களுக்கு மன்னாவை வழங்கியதை இந்தச் செயல் நினைவுபடுத்துகிறது.

யோவான் 6:16-24 இல், செங்கடலைப் பிரித்தபோது மோசே காட்டியதை விட, தண்ணீரின் மீது தனக்கு இருந்த அதிகாரத்தை இயேசு அதிகமாக கட்டளையிட்டு காட்டினார். பின்னர், 6:25-71 இல், கடலை கடந்த பிறகு, இயேசு தன்னை ”வானத்திலிருந்து வந்த உண்மையான அப்பம்” என்று காட்டினார், இது யாத்திராகமத்தின் நாட்களில் தேவன் வழங்கிய மன்னாவை விட சிறந்தது. மெய்யான அப்பமாக, அனைத்து விசுவாசிகளுக்கும் மெய்யான ஜீவனை வழங்குபவராக இயேசு பஸ்கா பண்டிகையை நிறைவேற்றினார்.

## கூடாரப் பண்டிகை

இயேசுவின் பொது ஊழியத்தின் ஐந்தாவது பகுதி, யோவான் 7:1-10:21 இல் அவர் கூடார பண்டிகையை ஆசரிப்பதைச் சூழ்ந்துள்ளது. யோவான் 7:1-52 இல், யோவான், கூடாரப் பண்டிகையை இயேசு எப்படி ஆசரித்தார் மற்றும் நிறைவேற்றினார் என்று பதிவு செய்துள்ளார். கூடாரப் பண்டிகையானது, தேவன் இஸ்ரவேலை எகிப்திலிருந்து விடுவித்ததையும், வனாந்தரத்தில் அவர் தண்ணீர் வழங்கியதையும் நினைவுகூரும் நிகழ்வாகும். அறுவடைக்காக தேவன் தொடர்ந்து மழை வழங்குவதையும் அவர்கள் அந்த பண்டிகையில் கொண்டாடினர். மேலும் தேவன் தம் மக்களை விடுவிக்கும் நாளுக்காக அது காத்திருந்தது. விருந்தின் போது, ஆசாரியன் ஆலயத்தின் பலிபீடத்தைச் சுற்றி தண்ணீரை ஊற்றுவதன் மூலம் தேவன் கிருபையாக கொடுகிறவற்றைப் பற்றி விளக்கினார். தண்ணீரைப் பற்றிய இந்த உருவகத்தைப் பயன்படுத்தி, இயேசு அவர்களுக்கு ”ஜீவத் தண்ணீரை” கொடுக்கக்கூடியவர் என்று தைரியமாக கூறினார்.

யோவான் 8:12-59 இல், இயேசு தன்னை தேவனுடைய குமாரன் என்று அழைத்துக்கொண்டு உண்மையான குமாரத்துவத்தைக் குறிப்பிட்டார். இயேசு தன்னை தேவ குமாரன் என்று அழைத்தார். அவிசுவாசியான யூதர்கள் ஆபிரகாமின் முறையான புத்திரர்கள் என்பதை அவர் மறுத்தார்.

9:1-41 இல், பிறப்பிலிருந்தே குருடனாக இருந்த ஒருவரை இயேசு குணப்படுத்தினார். அதற்கு பதிலளிக்கும் விதமாக, சந்தேகத்திற்கிடமான பரிசேயர்கள் இயேசு என்ன செய்தார் என்பதை கவனமாக ஆராய்கின்றனர். அவர்களின் விசுவாசமின்மையால், பரிசேயர்களை உண்மையில் குருடர்கள் என்று கூற இயேசுவைத் தூண்டியது. மேலும் 10:1-21 இல் இயேசு தன்னை நல்ல மேய்ப்பனாகக் காட்டினார். பரிசேயர்களைப் போலல்லாமல், இயேசு ஒரு நல்ல மேய்ப்பனாக இருந்தார், ஏனென்றால் அவர் தனது ஆடுகளுக்காக உயிரைக் கொடுக்கத் தயாராக இருந்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பிரதிஷ்டை பண்டிகை

இயேசுவின் பொது ஊழியத்தின் ஆறாவது பகுதி, யோவான் 10:22-11:57 இல் அவர் பிரதிஷ்டைப் பண்டிகையைக் கடைப்பிடிப்பதைச் சுற்றியுள்ள நிகழ்வுகளைப் பதிவு செய்கிறது. யோவான் 10:22-40 இயேசு பிரதிஷ்டைப் பண்டிகையை அனுசரித்து நிறைவேற்றினார் என்று தெரிவிக்கிறது. இந்த பண்டிகை பழைய ஏற்பாட்டில் நிறுவப்படவில்லை. கி.மு. 165 இல், மக்காபியர்கள் கிரேக்க அரசர் ஆண்டியோகஸ் எபிபேனசுக்கு எதிராக ஒரு வெற்றிகரமான கிளர்ச்சியை வழிநடத்திய பின்னர், அதன் அனுசரிப்பு தொடங்கியது. ஆண்டியோகஸ் தன்னை தேவனின் வெளிப்பாடு என்று நம்பியதால் எபிபேனஸ் என்ற பட்டத்தை எடுத்துக் கொண்டார். அவர் எருசலேமில் பலரைக் கொன்று குவித்தார், தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தினார், யூதர்கள் ஜீயஸை வழிபட வேண்டுமென்று உத்தரவிட்டார். எனவே, தேவாலயம் மக்காபியர்களால் மீட்டெடுக்கப்பட்ட பின்னர் மீண்டும் பிரதிஷ்டை செய்ததன் மூலம் பிரதிஷ்டை பண்டிகை கொண்டாடப்பட்டது. இன்று, இந்த பண்டிகை ஹனுக்கா என்கிற எபிரெய பெயரால் நன்கு அறியப்படுகிறது, அதாவது "அர்ப்பணிப்பு" என்பது இதன் அர்த்தமாகும்.

இந்த பகுதி இயேசுவையும் ஆண்டியோகஸையும் மறைமுகமாக வேறுபடுத்துகிறது. ஒருபுறம், ஆண்டியோகஸ் தேவனுடைய ஜனங்களைக் கொன்று குவித்து, அவருடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்தியபோது, தன்னை தெய்வீகமானவர் என்று பொய்யாகக் கூறிக்கொண்டார். மறுபட்சத்தில், இயேசு உண்மையில் தேவனுடைய குமாரன் ஆவார், அவர் தம் ஜனங்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பது உட்பட பிதாவின் வேலையை உண்மையாகச் செய்கிறார். யோவான் 10:36 இல், இயேசு தாம் பிர்த்தெடுக்கப்பட்டவர் எனக் கூறினார் – அல்லது சில மொழிபெயர்ப்புகள் அதை "பரிசுத்தமாக்கப்பட்ட" என்று கூறுகின்றன – மேலும் அவர் உலகத்தில் அனுப்பப்பட்டார். இந்த மொழி அர்ப்பணிப்பு பண்டிகையில் தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டதை நினைவு கூர்ந்தது. நிச்சயமாக, இயேசு ஏற்கனவே யோவான் 2:19-21 இல் உள்ள அவரது சரீரத்தின் உயிர்த்தெழுதலுடன் ஆலயத்தின் மறுகட்டமைப்பை ஒப்பிட்டுப் பார்த்தார்.

இந்த கருப்பொருள்கள் யோவான் 11:1-57 இல் லாசருவின் உயிர்த்தெழுதலின் கதைக்குள் கொண்டு செல்லப்படுகின்றன, இது மரணத்தின் மீது இயேசுவுக்கு இருந்த தெய்வீக வல்லமையை நிரூபிக்கிறது. மேலும் லாசரு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்படுவது, சுவிசேஷத்தின் முடிவில் இயேசுவின் சொந்த உயிர்த்தெழுதலை முன்னறிவிக்கிறது, அப்போது பிரதிஷ்டை பண்டிகையின் அனைத்து நம்பிக்கைகளும் இறுதியாக நிறைவேறும்.

## மூன்றாம் பஸ்கா

இயேசுவின் பொது ஊழியத்தைக் கையாளும் ஏழாவது பகுதி, யோவான் 12:1-50 இல் மூன்றாவது பஸ்காவுக்கான ஆயத்தங்களை மையமாகக் கொண்டது. யோவான் குறிப்பிடும் இந்த மூன்றாவது பஸ்காவிற்கான இயேசுவின் ஆயத்தங்கள், யோவான் 13-17 இல் அவருடைய பன்னிரண்டு சீஷர்களுக்கு அவர் ஊழியம் செய்வதற்கும், 19 ஆம் அதிகாரத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அவர் தன்னை தியாகம் செய்வதற்கும் மேடை அமைத்தது. 12:1-11 இல் அடக்கம் செய்வதற்கு இயேசு அபிஷேகம் செய்யப்பட்டதில் இருந்து இயேசுவின் ஆயத்தங்கள் தொடங்கின. 12-19 வசனங்களில், எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிகரமான நுழைவை யோவான் பதிவு செய்தார். யோவான் 12:20-50 இல், இயேசு தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் மகிமைப்படுத்தப்பட வேண்டிய நேரம் இது என்று பகிரங்கமாக அறிவித்தார். கேட்கிறவர்கள் தம்மை விசுவாசிக்கும்படி இயேசு அழைத்தார். ஆனால் அவர்களுக்கு முன்பாக அற்புதங்களைச் செய்த பிறகும், பல யூதர்கள் விசுவாசித்தார்கள், ஆனால் பலர் விசுவாசிக்கவில்லை.

யோவான் சுவிசேஷத்தின் அடுத்த முக்கிய பகுதி, இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களுக்கும், அவரை விசுவாசித்தவர்களுக்கும் அவர் செய்த தனிப்பட்ட ஊழியத்தைப் பற்றியதாகும். இந்தப் பகுதி யோவான் 13:1–20:31 இல் காணப்படுகிறது.

# இயேசுவின் தனிப்பட்ட ஊழியம்

சுவிசேஷத்தின் இந்தப் பகுதியில் இயேசுவின் கடைசி இராப்போஜனம் மற்றும் அவரது கைது, சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய யோவானின் விவரம் உள்ளது. இயேசு தம்முடைய மகிமையை தம்முடைய விசேஷித்த மக்களுக்கு வெளிப்படுத்திய கதை இது. தம்மை விசுவாசித்தவர்களுக்கு இயேசு சேவை புரிந்தார் என்றும் அவர்களுக்காகத் தன் ஜீவனைக் கொடுத்தார் என்றும் யோவான் போதித்தார். இந்த நிகழ்வுகள் மூலம், இயேசு தேவனுடைய மகிமையை இதுவரை கண்டிராத வகையில் வெளிப்படுத்தினார்.

யோவான் சுவிசேஷத்தின் இந்தப் பகுதி, யோவான் 1:11-12ல் யோவான் வெளிப்படுத்திய சிந்தனையைத் திறக்கிறது, அங்கு அவர் இந்த வார்த்தைகளை எழுதினார்:

> [இயேசு] தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார் (யோவான் 1:11-12).

யோவான் சுவிசேஷத்தின் முதல் 12 அதிகாரங்களில், இயேசு உலகிற்கு ஊழியம் செய்தார், ஆனால் அவருக்கு சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர், அதிகாரம் 13 இல் தொடங்கி, இயேசு தன்னை ஏற்றுக்கொண்டவர்களான அவருடைய சீஷர்கள் மீது கவனம் செலுத்தினார்.

யோவான் சுவிசேஷத்தின் இந்தப் பகுதியை இரண்டு பகுதிகளாகப் பார்ப்போம். முதலாவதாக, கடைசி இராபோஜனத்தின் நிகழ்வுகளை நாம் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, இயேசுவின் மிகப் பெரிய மகிமையின் வேளையை, அதாவது அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பார்ப்போம். கடைசி இராப்போஜனத்தைச் சுற்றியுள்ள நிகழ்வுகளுடன் ஆரம்பிக்கலாம்.

## கடைசி இராப்போஜனம்

கடைசி இராப்போஜனத்தில் இயேசு தம் சீஷர்களுக்கு ஆற்றிய ஊழியம் நான்கு வெவ்வேறு பகுதிகளாக விவரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதியில், யோவான் 13:1-30 இல் இயேசு அவர்களின் கால்களைக் கழுவி அவர்களுக்குச் சேவை செய்தார்.

**ஊழியம்.** இயேசு தம்முடைய சீஷர்களின் பாதங்களைத் தாழ்மையுடன் கழுவியபோது அவருடைய முழு பூமிக்குரிய ஊழியத்தையும் அடையாளப்படுத்தினார். இந்த நிகழ்வு அவரது அவதாரம் மற்றும் சிலுவையில் அவரது இரட்சிப்பின் தியாகம் இரண்டையும் வியத்தகு முறையில் சித்தரித்தது. பிரபஞ்சத்தை உருவாக்கியவர் தனது சொந்த ஜனங்களுக்கு முன்னால் பணிந்து, அவர்களின் சோர்வுற்ற, அழுக்கு கால்களைக் கழுவி அவர்களுக்கு சேவை செய்தார். அடுத்த நாள் சிலுவையில் அவர் தனது சுத்திகரிப்பின் இரத்தத்தால் அவர்களின் சோர்வுற்ற, அழுக்கு உள்ளங்களை கழுவும் போது அதன் உச்சக்கட்டத்தை அடையும் ஒரு சேவை அது. அவர்களுடைய பாதங்களைக் கழுவிய பின், சீஷர்களில் ஒருவர் தம்மைக் காட்டிக் கொடுப்பதாக இயேசு அறிவித்தார். பின்னர், சாத்தான் யூதாஸில் நுழைந்த பிறகு, துரோகத்தை நிறைவேற்ற யூதாஸ் அறையை விட்டு வெளியேறினான்.

தம் சீஷர்களின் பாதங்களைக் கழுவி அவர்களுக்குச் சேவை செய்த பிறகு, யோவான் 13:31–14:31 இல் இயேசு அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

**ஆறுதல்.** யூதாஸ் வெளியேறிய பிறகு, இயேசு தம்முடைய ”பிரியாவிடை சொற்பொழிவு” என்று அழைக்கப்படுவதைத் தொடங்கினார், அதில் அவர் தம்

உண்மையுள்ள சீஷர்களை விரைவில் விட்டுச் செல்வார் என்பதற்காக அவர்களைத் ஆயத்தப்படுத்தினார்.

> அப்போஸ்தலர்கள் வாசகர்களாக இருந்தாலும், நிச்சயமாக, அப்போஸ்தல ஊழியத்தின் எதிர்கால சந்ததியினருக்கு அது பாதுகாக்கப்பட வேண்டிய சில காரணங்கள் உள்ளன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு அப்போஸ்தலராகவும், பயிற்சியாளராகவும் வாழ விரும்பும் எந்தவொரு நபருக்கும், கற்றுக்கொள்பவராகவும், உலகிற்கு அனுப்பப்பட்டிருப்பதை புரிந்துகொள்பவராகவும் மாற்றத்தக்க கருத்துக்களைக் கொண்டிருக்கலாம். உங்களைப் பற்றிய தொழில்சார் புரிதல் உங்களுக்கு இருந்தால், மேல் அறை சொற்பொழிவில் அற்புதமான போதனைகள் நிறைய உள்ளன என்பதை அறிந்து கொள்ளலாம். அந்த பத்தியில் தலைவர்களுக்கான குறிப்பிட்ட பயன்பாடுகள் இருப்பதாக நான் நினைக்கிறேன். கிறிஸ்துவின் சரீரத்தில் தலைமை இடங்களுக்கு அழைக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் அந்த அதிகாரங்களை படிப்பதால் மிகுந்த பலன் கிடைக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் நான் பொதுவாக சொல்வது என்னவென்றால், எல்லா கிறிஸ்தவ மையக்கருத்துகளும் யோவான் 17 இல் இயேசுவால் உண்மையில் உருவகப்படுத்தப்பட்டுள்ளன, ஏனென்றால் அவர் ஜெபத்தைப் பிரித்தார், அதாவது அப்போஸ்தலர்களுக்காக ஜெபிக்கிறார், “ஆனால் நான் அவர்களுக்காக மட்டுமல்ல, அவர்களின் சாட்சியைக் கேட்டு அவர்களை விசுவாசிப்பவர்களுக்காகவும் ஜெபிக்கிறேன்” என்று பின்னர் அவர் கூறுகிறார். எனவே, யோவான் 14, 15, 16 மற்றும் 17 இல் உள்ள இந்த முழுப் பகுதியும் பன்னிருவருக்கும் பன்னிருவருக்கு பிறகு அவர்களின் வேலையை செய்பவர்களுக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது. எனவே, இதை அனைத்து விசுவாசிகளுக்குமான ஒரு பிரிவாகவே நான் பார்க்கிறேன்.
>
> Dr. ஸ்டீவ் ஹார்ப்பர்

இயேசு தனது பிரியாவிடை உரையைத் தொடங்கினார், அவர் மகிமைப்படுத்தப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது - அதாவது அவர் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, பரலோகத்திலுள்ள தம் பிதாவிடம் போகப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

போகிறார். அவருடைய சீஷர்கள் அவர்களுக்கிடையே நடமாடுவதும், பேசுவதும், வாழ்வதுமாக அவருடைய சரீர பிரசன்னம் இல்லாமல் வாழ வேண்டியதாயிற்று. பேதுரு தன்னை மூன்று முறை மறுதலிக்கப் போகிறார் என்றும் அவர் கணித்தார். ஆனால் இந்த கடினமான செய்திகள் தம்முடைய சீஷர்களை தொந்தரவு செய்வதை இயேசு அறிந்திருந்தார், எனவே அவர் அவர்களை ஆறுதல்படுத்தினார், மேலும் இறுதியில் அவர்களையும் பிதாவிடம் கொண்டு செல்வேன் என்று அவர்களுக்கு உறுதியளித்தார். அவர் அவர்களைத் தனியாக விடமாட்டேன் என்று கூறினார்; அவருக்குப் பதிலாக அவர்களுக்கு ஊழியம் செய்ய அவர் பரிசுத்த ஆவியை அனுப்புவார். உதாரணமாக, யோவான் 14:26 இல் உள்ள இயேசுவின் வாக்குத்தத்தத்தைக் கவனியுங்கள்:

> என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவான் 14:26).

தம்முடைய சீஷர்கள் ஒருபோதும் தனியாக இருக்க மாட்டார்கள் என்று இயேசு வாக்குத்தத்தம் அளித்தார். அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் மற்றும் உலகத்தால் துன்புறுத்தப்படுவார்கள், ஆனால் அவர்கள் ஒருபோதும் இயேசுவின் நாமத்தையும் தங்களையும் தற்காக்க வேண்டிய அவசியமில்லை. சத்திய ஆவியானவர், இயேசுவின் சார்பாக பிழையில்லாமலும் அதிகாரமாகவும் பேசவும் எழுதவும் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பார்.

இயேசு தம் சீஷர்களை ஆறுதல்படுத்திய பிறகு, யோவான் 15:1-16:33 இல் தாம் புறப்படுவதற்கும் அவர்களின் எதிர்கால ஊழியங்களுக்காகவும் அவர்களைத் தயார்படுத்தினார்.

**ஆயத்தம்.** முந்தைய பகுதியின் முடிவில், இயேசுவும் அவருடைய சீஷர்களும் தாங்கள் இருந்த இடத்தை விட்டு வெளியேறினர், மேலும் இயேசு தனது சொற்பொழிவின் புதிய பகுதியைத் தொடங்கினார். அவர் யோவான் 15:1-8 இல் தன்னை ”உண்மையான திராட்சைச் செடி” என்று விவரிப்பதன் மூலம் தொடங்கினார். இந்த உருவகம் சங்கீதம் 80:8 மற்றும் ஏசாயா 5:1-7 ஆகியவற்றிலிருந்து வந்தது, அங்கு இஸ்ரவேல் தேசம் ஒரு புகழ்பெற்ற திராட்சை செடியாக சித்தரிக்கப்பட்டது. இஸ்ரவேலின் தோல்வி மற்றும் பாவத்தின் காரணமாக, அது பின்னர் எரேமியா 2:21 இல் ”கெட்ட, காட்டு செடி” என்று அழைக்கப்பட்டது. ஆனால் இஸ்ரவேலுக்கான உண்மையான மற்றும் உண்மையுள்ள தேசத்தை தானே மறுசீரமைக்கிறார் என்பதையும், அவர்கள் இந்த பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதையும் தம் சீஷர்களுக்கு உறுதியளிக்க

இயேசு இந்த உருவகத்தைப் பயன்படுத்தினார். யோவான் 15:1-5 இல் இயேசு சொன்னதை கவனியுங்கள்:

> நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் (யோவான் 15:1-5).

உண்மையான திராட்சை செடி என்று கூறிக்கொண்டு, இயேசு ஒரு முக்கியமான அர்த்தத்தில் தாமே இஸ்ரவேல் என்று சொல்லிக் கொண்டிருந்தார். இயேசு இஸ்ரவேலைப் பிரதிநிதித்துவப்படுத்தினார், மேலும் அவர் இஸ்ரவேலின் முடிவை நிறைவேற்றினார். இஸ்ரவேல் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை நிறுவத் தவறிவிட்டது, ஆனால் இயேசு அதை வெற்றிகரமாக செய்தார். அவருடைய சீஷர்கள் திராட்சை செடியின் கிளைகளாக இருந்தனர். அவர்கள் தேவனுடைய ஜனங்களில் ஒரு பகுதியாக இருந்தனர், மேலும் தேவன் தனது திட்டத்தை காலங்காலமாக நிறைவேற்றும் முகவர்கள் ஆவர்.

ஆனால் உலகம் தம்முடைய சீஷர்களை வெறுக்கும் என்பதையும் இயேசு அறிந்திருந்தார், ஏனென்றால் அது ஏற்கனவே அவரை வெறுத்தது. எனவே, அவர் அவர்களுக்காக பிதாவிடம் ஜெபிப்பதாக அவர்களுக்கு உறுதியளித்தார். அவர்கள் அவருடைய தூதுவர்கள் ஆவர், மேலும் பூமியில் அவருடைய அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் ஆவர். இயேசு தாமே ஜெபித்ததைப் போலவே பிதாவும் அவர்களின் ஜெபங்களுக்கு செவிசாய்ப்பார். யோவான் 16:23-24 இல் அவர் அவர்களிடம் இவ்வாறு கூறினார்:

> மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள் (யோவான் 16:23-24).

இயேசு தம் சீஷர்களை தயார் செய்த பிறகு, யோவான் 17:1-26 இல் அவர்களுக்காக ஜெபித்தார்.

**ஜெபம்.** யோவான் 17 இல் இயேசுவின் ஜெபம் பெரும்பாலும் அவருடைய பிரதான ஆசாரிய ஜெபம் என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் அவர் ஆசாரிய வழிகளில் தம்மைப் பின்பற்றுபவர்களுக்காக பரிந்து பேசினார். குறிப்பாக, தம்முடைய சீஷர்கள் மூலம் இன்னும் பலர் விசுவாசம் அடையும்படி, பிதா அவர்களைப் பாதுகாக்கும்படி இயேசு ஜெபித்தார். அவர்களும் அவர்களுடைய சீஷர்களும் உலக சக்திகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர்களுடைய ஒற்றுமை அவர்களைப் பலப்படுத்த வேண்டும் என்றும், அவர்களுடைய வாழ்க்கை தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்றும் அவர் ஜெபித்தார்.

> நேரம் குறைவாக இருப்பதை இயேசு அறிவார். உலகத்தின் தொடக்கத்திற்கு முன்பு அவர்கள் ஒன்றாக இருந்ததைப் போல, தாம் பிதாவுடன் இருக்கத் திரும்புவதற்கான நேரம் இது என்றார். இந்த நேரத்தில், வேதவாக்கியங்கள் நிறைவேறும் பொருட்டு, அழிவின் மகனைத் தவிர, நீர் எனக்குக் கொடுத்த அனைவரையும் நான் வைத்திருக்கிறேன் என்று இயேசு கூறுகிறார். எனவே, இயேசு உண்மையில் சீஷர்களுக்காக பிதாவிடம் ஜெபிக்கிறார். நான் அவர்களுடன் 3 முதல் 3-1/2 ஆண்டுகள் வரை அவர்களை பரிசுத்தப்படுத்தவும், அவர்களை இந்த நிலைக்கு கொண்டு வரவும் உழைத்தேன் என்று அவர் கூறுகிறார். ஆனால் இப்போது, நான் அவர்களுடன் இங்கு இருக்கப் போவதில்லை, எனவே பிதாவே, தயவுசெய்து அவர்களை பார்த்துக் கொள்ளும், இந்த பரிசுத்தப்படுத்தும் செயல்முறையைத் தொடரும், ஏனென்றால் அவர்கள் பெரும் சோதனைகளையும் பெரும் துன்புறுத்தலையும் சந்திக்கப் போகிறார்கள், இப்போது அவர்கள் இதை எப்படிக் கடந்து செல்லப் போகிறார்கள்? தனது சீஷர்களின் ஊழியம் மற்றும் சோதனைகள், துன்புறுத்தல்கள், அவர்கள் சந்திக்கப்போகும் உயிர் தியாகம் மற்றும் சுவிசேஷம் பரவுவதற்கு அவர்கள் தியாகம் செய்ய வேண்டிய விஷயங்கள் ஆகியவற்றைக் கவனித்துக்கொள்ளும்படி தேவனிடம் அவர் செய்யும் ஜெபம் ஆகும்.
>
> Dr. தாடியஸ் ஜே.ஜேம்ஸ், Jr.

கடைசி இராப்போஜனத்தை விவரித்த பிறகு, யோவான் யோவான் 18:1-20:31 இல் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை அறிவித்தார்.

## மரணம் மற்றும் உயிர்த்தெழுதல்

யோவான் சுவிசேஷத்தில், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நிகழ்வுகள் பெரும்பாலும் இயேசுவின் மகிமையின் மணிநேரமாக விவரிக்கப்படுகின்றன. பழைய ஏற்பாட்டில், ”மகிமை” என்ற வார்த்தை பெரும்பாலும் தேவன் தனது மக்களிடையே இருப்பதைக்

குறிக்கிறது. இஸ்ரவேலின் வரலாறு முழுவதும், தேவனின் மகிமை இஸ்ரவேலுடன் இருந்தது. யாத்திராகமம் 16:10 இல் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தபோது இஸ்ரவேலர்களை வழிநடத்திய மேகமே அவருடைய மகிமையாகும். இது யாத்திராகமம் 40:34-35 இல் உள்ள தேவனின் ஆசரிப்பு கூடாரத்தில் இருந்தது. 1 இராஜாக்கள் 8:11 இல் சாலொமோனின் ஆலயத்தில் தேவனின் மகிமை இருந்தது. இதற்கு இணையாக, யோவான் சுவிசேஷத்தில் ”மகிமை” என்ற வார்த்தை இயேசுவை தேவனின் அவதாரமாக தனது ஜனங்களிடையே வசிப்பதாகக் குறிக்கிறது. ஆனால் இயேசு ”அவரது மகிமையின் மணிநேரம்” என்று குறிப்பிடும்போது, அவர் வழக்கமாக தனது வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறிப்பிடுகிறார், அதில் அவருடைய மகிமை மிகவும் ஆழமான முறையில் உலகிற்கு நிரூபிக்கப்படும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் தனது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறிப்பிடுகிறார்.

நாம் பொதுவாக மரணத்தை பெருமையாக நினைப்பதில்லை. ஆனால் இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் தேவனுடைய ஜனங்களுக்கு ஒப்புரவை வாங்கின. அவரது தன்னார்வ சுய தியாகமும் உயிர்த்தெழுதலும் அவரை விசுவாசித்து அவரை மேசியாவாக ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் இரட்சிப்பையும் ஜீவனையும் கொண்டு வந்தது. தேவனுடைய அன்பையும் வல்லமையையும் நாம் உணரும் விதத்தில் வெளிப்படுத்தின. அவை துயரம் நிறைந்ததாக இருந்தன, ஆனால் அவை அழகாக இருந்தன. மேலும் அவைகள் தேவனுக்கு அளவற்ற பெருமையையும் புகழையும் கொண்டு வந்தன. சுருக்கமாகச் சொன்னால், அவை மனித வரலாற்றில் இதுவரை நடந்தவற்றில் மிக அற்புதமான நிகழ்வுகள் ஆகும்.

யோவான் 18:1-19:16 இல் இயேசுவின் கைது மற்றும் சோதனைகளில் தொடங்கி, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய விவரம் மூன்று முக்கிய பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

**கைது மற்றும் சோதனைகள்.** முதலில், 18:1-11 இல் இயேசு கைது செய்யப்பட்டதைப் பற்றி வாசிக்கிறோம். யூதாஸ் இயேசுவை அதிகாரிகளின் கைகளில் ஒப்படைத்த பிறகு, போர் வீரர்கள் பிரதான ஆசாரியனிடமிருந்தும் பரிசேயர்களிடமிருந்தும் வந்து இயேசுவைக் கைது செய்தனர். 18:12-27 இல், இயேசு பிரதான ஆசாரியனாகிய காய்பாவிடம் விசாரிக்கப்படுவதற்காகக் கொண்டு வரப்பட்டார். இந்த நேரத்தில், இயேசு தீர்க்கதரிசனம் கூறியது போல் பேதுரு மூன்று முறை இயேசுவை மறுதலித்தார்.

அடுத்து, ரோம ஆளுநர் பிலாத்து 18:28-19:16 இல் இயேசுவை விசாரணை செய்தார். இயேசு நிரபராதி என்று பிலாத்து முடிவு செய்தார், ஆனால் யூதர்களுக்கு பயந்து அவரை விடுவிக்கவில்லை. ஆனால் இயேசுவின் கைது மற்றும் சோதனைகளுக்குப் பின்னால் இருந்தவர் தேவன் தான். பிலாத்து அல்லது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

காய்பாவின் கட்டுப்பாட்டில் எதுவும் இல்லை. எல்லாம் தேவனின் திட்டப்படி நடந்தது. யோவான் 19:10-11 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> பிலாத்து, "உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா?" என்றான். இயேசு பிரதியுத்தரமாக: "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" (யோவான் 19:10-11).

இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய யோவானுடைய விவரத்தின் இரண்டாவது முக்கிய பகுதி யோவான் 19:16-37 இல் இயேசு சிலுவையில் அறையப்படுதல் ஆகும்.

**சிலுவையில் அறையப்படுதல்.** இயேசுவின் மரணத்தைப் பற்றிய தனது கணக்கில், சிலுவையில் அறையப்பட்ட சம்பவங்கள் மேசியாவுக்கான பல பழைய ஏற்பாட்டு எதிர்பார்ப்புகளை எவ்வாறு பூர்த்தி செய்தன என்பதை யோவான் விளக்கினார். இந்த விவரங்கள் இயேசுவை ஆச்சரியத்தில் ஆழ்த்தவில்லை என்பது நிரூபிக்கப்பட்டது; எல்லாம் தேவனின் திட்டப்படி நடந்தது.

தம்முடைய கைது, சோதனைகள் மற்றும் சிலுவையில் அறையப்பட்ட காலம் முழுவதும், இயேசு அமைதியாக வளைந்து கொடுக்காத கண்ணியத்தைக் கடைப்பிடித்தார். தேவனுடைய குமாரன் தம்முடைய ஜனங்களுக்காகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்தார், அப்படிச் செய்வதன் மூலம் தேவனுடைய மகிமையை இதுவரை வெளிப்படுத்தாத விதத்தில் வெளிப்படுத்தினார். தேவன் தம் மக்களை விடுவிக்க எவ்வளவு தூரம் செல்வார்? சிலுவை வரை செல்வார்!

> இயேசு தமக்கு முன் வைக்கப்பட்ட மகிழ்ச்சிக்காக சிலுவைக்குச் சென்றார் என்று வேதம் கூறுகிறது. சிலுவை என்பது இதுவரை யாரும் செய்யாத கடினமான காரியம். தேவனுடைய குமாரன் சிலுவையில் அனுபவித்ததை விட பெரிய துன்பம் எதுவும் இல்லை, ஏனெனில் அவர் ஒரு கொடூரமான கடினமான சரீர மரணத்தை மட்டும் அனுபவிக்கவில்லை, ஆனால் அவர் நம் பாவத்தை அவர் மீது சுமந்தார், தேவனின் கோபத்தை அவர் தோள்களில் சுமந்தார். எனவே, இது எவராலும் செய்யப்படாத கடினமான காரியம், ஆனால் இயேசு தமக்கு முன் வைக்கப்பட்ட மகிழ்ச்சிக்காக அதைச் செய்தார். அவர் ஏன் இதைச் செய்ய வேண்டும்? அதனால் என்ன விளையும் என்பதை அறிந்திருந்ததால் அதைச் செய்தார். அது தேவனின் மகிமையை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வெளிப்படுத்தும். அவருடைய அன்பு, நீதி, கோபம், பரிசுத்தம், இரக்கம், தயவு, எல்லாமே சிலுவையில் அழகாக ஒன்றுகூடி, அவர் யார் என்று நாம் பார்க்கும் விதத்தில், எல்லாவற்றுக்காகவும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய அவரைச் சுற்றி நித்தியம் முழுவதும் நாம் ஆராதிக்க முடியும். நாம் ஆராதிக்கும் இடம் அவருடைய சிங்காசனம் ஆகும். எனவே, தேவன் தம்முடைய குணத்தையும் மகிமையையும் வெளிப்படுத்தி, சிலுவையில் அவர் யார் என்பதை நமக்குக் காட்டினார், நாம் அவரை ஆராதிக்கிறோம். மேலும் அவர் இந்த சிலுவையில் பல குமாரர்களை மகிமைக்குள் கொண்டு வருகிறார். அதன் பலன் அப்படி இருப்பதால் தான் அவர் அதை மகிழ்ச்சியுடன் செய்ய முடிந்தது
>
> Dr. கே. எரிக் தோனேஸ்

மூன்றாவதாக, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய அறிக்கை யோவான் 20:1-31 இல் உள்ள உயிர்த்தெழுதலுடன் முடிவடைகிறது.

**உயிர்த்தெழுதல்.** யோவான் 20:1-9 இன் படி, இயேசுவின் கல்லறை ஒரு வரலாற்று உண்மையாகும். மரியாள், பேதுரு மற்றும் யோவான் ஆகியோர் இயேசு கல்லறையில் இல்லாததைக் கண்டனர். 20:10-31 இல், இயேசு மகதலேனா மரியாள், சீஷர்கள் மற்றும் தோமாவுக்குத் தோன்றினார். இயேசுவைப் பின்பற்றுபவர்கள் சற்று சந்தேகம் கொண்டவர்களாகவும், எளிதில் ஏமாறாதவர்களாகவும் இருந்ததை இந்த அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

குறிப்பாக, இயேசு சீஷர்களுக்குத் தோன்றிய முதல் முறை தோமா அங்கு இருக்கவில்லை. மற்றும் தோமா சந்தேகமுடையவராய் இருந்தார். அவருக்கு ஆதாரம் தேவைப்பட்டது. உயிர்த்தெழுதல் பற்றிய சில பைத்தியக்காரத்தனமான கதைகளை அவர் நம்பப் போவதில்லை. வசனம் 28 இல் அவரது அறிக்கை யோவானுடைய கதையின் உச்சக்கட்டமாகும், அங்கு தோமா இயேசுவை ”என் கர்த்தரே மற்றும் என் தேவனே” என்று ஒப்புக்கொண்டார்.

> தோமா, தனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்த மற்ற சீஷர்களுடன் இத்தனை காலம் பயணித்துக்கொண்டிருக்கிறார். இவர்களை அவர் அறிவார். ஆனால் அவர்கள் இயேசு உயிர்த்தெழுந்ததைக் கண்டதாகச் சொன்னபோது அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்நியர்கள் இதை அவரிடம் சொல்வது போல் இல்லை, அவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். மேலும் அவர் அதை நம்ப வைக்க

முடியாது. நம்புவதற்கும், மீண்டும் ஏமாற்றமடைவதற்கும் அவரது இயலாமைக்கு இது தொடர்புள்ளதா என்று நான் சந்தேகிக்கிறேன். அவர் மீண்டும் ஏமாற்றமடைய பயப்படுகிறார் என்று நினைக்கிறேன்.

Dr. டேவிட் ஏ. ரெடலிங்ஸ்

”நான் என் விரல்களை இயேசுவை ஆணி அடித்த கைகளிலும் அவரின் விலாவிலும் வைக்காவிட்டால், நான் நம்பமாட்டேன்” என்று தோமா சந்தேகப்பட்டார், மேலும் தோமா அடிக்கடி ”சந்தேகமுள்ள தோமா” என்று சாடப்படுகிறார். ஏனென்றால் அவர் இயேசுவை நம்பவில்லை, ஆனால் தோமா மீது நாம் சற்று குறைவாக கோபப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். முதல் நிகழ்வில், இயேசு பன்னிருவர் மத்தியில் வந்து, அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தியபோது தோமா அவர்களுடன் இல்லை என்று யோவான் கூறுகிறார். இரண்டாவதாக, இயேசுவின் உயிர்த்தெழுதலை நேரில் கண்ட சாட்சிகளாக சீஷர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று நாம் நம்பினால், உயிர்த்தெழுதலை நம்புவதற்கு தோமா பார்க்க வேண்டிய ஒரு கட்டாயம் இருந்தது. மூன்றாவதாக, இயேசு அவர்கள் மத்தியில் நின்று தோமாவுக்குத் தன்னை வெளிப்படுத்தியபோது, தோமா விசுவாசத்தின் தைரியமானதும் தெளிவானதுமான அறிக்கையிடுகிறார் என்பதையும் நாம் சொல்ல வேண்டும். அவர் இயேசுவை ”என் கர்த்தரே மற்றும் என் தேவனே” என்று அழைக்கிறார். நீங்கள் காண்பதால் விசுவாசிக்கிறீர்கள், ஆனால் இனி, காணாமல் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்களாக இருப்பார்கள் என்று யோவான் யோவான் 20 இன் இறுதியில் விளக்குகிறார். விசுவாசிப்பதற்கு பார்க்க வேண்டிய ஒரு உணர்வு தோமாவிற்கு இருக்கிறது, ஆனால் நீங்களும் நானும் பார்க்க வேண்டும் என்கிற உணர்வும் இருக்கிறது, இயேசுவை நமக்கு முன்பாகப் பார்ப்பதன் மூலம் அல்ல, ஆனால் உண்மையில் அவர்கள் பார்த்ததை புரிந்துகொண்டு பாராட்டி அதை நாம் சுயமாக நம்ப வேண்டும். எனவே, தோமாவிற்கு சில சமயங்களில் நாம் அநியாயம் செய்கிறோம் என்று நினைக்கிறேன், ஏனென்றால் அவருக்கு ஒரு தனித்துவமான பாத்திரம் இருந்தது, மேலும் அவர் ஒரு சிறந்த முன்மாதிரி என்பதால் அவர் இயேசுவைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பார்த்தபோது, அவர் மீது அற்புதமான விசுவாசத்தை வெளிப்படுத்தினார். உண்மையில் அவர் நமக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கிறார், நாம் இயேசு யார் என்பதை அறிய வரும்போது, நாமும் கீழே விழுந்து அவரை ஆராதிக்க வேண்டும்.
>
> Rev. Dr. சைமன் வைபர்ட்

யோவான் சுவிசேஷத்தின் கடைசிப் பகுதியானது, யோவான் 21:1-25 இல் பதிவுசெய்யப்பட்ட இயேசுவின் பூமிக்குரிய வாழ்க்கை மற்றும் ஊழியத்தைப் பற்றிய அவரது கணக்கின் முடிவாகும்.

## முடிவுரை

இந்த முடிவுரை முழு சுவிசேஷத்திலிருந்தும் கருப்பொருள்களை எடுத்துக்கொள்கிறது, பின்னர் வாசகர்களை எதிர்காலத்தை நோக்கி வழிநடத்துகிறது. முந்தைய அதிகாரத்தைப் போலவே, 1-14 வசனங்களில் இயேசுவின் உயிர்த்தெழுதல் தோற்றத்தை இது தெரிவிக்கிறது. ஆனால் கதையின் அழுத்தம் அவர் காணப்பட்டதன் உண்மையின் மீது இல்லை. 1 மற்றும் 14 ஆகிய இரண்டு வசனங்களிலும், யோவான் இந்த தோற்றத்தை ஒரு வெளிப்பாடாகப் பேசினார், இயேசு ”அவருடைய மகிமையை வெளிப்படுத்தினார்” என்று 2:11 இல் பயன்படுத்திய அதே வார்த்தையைப் பயன்படுத்தினார். எனவே, இந்த தோற்றத்தை உயிர்த்தெழுதலின் எளிய சான்றாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, இயேசுவின் வெளிப்பாடு மற்றும் அவருடைய மகிமையின் நிறைவாக இந்த கணக்கை நாம் வாசிக்க யோவான் விரும்பினார், அது அவருடைய சுவிசேஷத்தின் முதல் அதிகாரத்தில் தொடங்கி அதன் அனைத்து அறிக்கைகளிலும் தொடர்ந்தது.

மேலும், முதன்மையான அப்போஸ்தலன் பேதுரு மூன்று முறை இயேசுவை மறுதலித்திருந்தாலும், இயேசுவைப் பற்றி சாட்சி சொல்ல அப்போஸ்தலர்கள் மற்றும் பிற சீஷர்களின் அதிகாரத்தை இந்த முடிவுரை உறுதிப்படுத்துகிறது. யோவான் 21:15-23 இல், பேதுருவை மன்னித்தார், மேலும் அவரை மூன்று வெவ்வேறு நேரங்களில் மீட்டெடுத்தார். இந்த மறுசீரமைப்புகளில், தேவனின் மந்தையைப் பராமரிக்க இயேசு பேதுருவை நியமித்தார். இயேசுவே நல்ல மேய்ப்பராக இருந்தார். ஆனால் இப்போது தேவனுடைய ஜனங்களைக் கவனித்துக்கொள்வதில் தன்னைப் பின்பற்ற பேதுருவை நியமித்தார்.

மற்ற சுவிசேஷங்கள் ஒவ்வொன்றும் சில வகையான பெரிய ஆணையுடன் முடிவடைகின்றன. அதாவது சபையைக் கட்டும்படி இயேசு தனது அப்போஸ்தலர்களுக்கும் மற்ற சீஷர்களுக்கும் கட்டளையிட்டார். பேதுருவின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மறுசீரமைப்பு பற்றிய இந்த கதை, சபையின் எதிர்காலத்தை யோவான் பார்க்கும் வழியாகும். எப்பொழுதும் தம் ஜனங்களுடன் இருப்பேன் என்று இயேசு வாக்குக் கொடுத்திருந்தார். பேதுருவைப் போன்ற மற்ற மேய்ப்பர்கள் மூலம் தான் எப்போதும் தன் மக்களுடன் இருப்பார் என்பதை தெளிவுபடுத்த அவர் இந்த தருணத்தை எடுத்துக் கொண்டார். 1 பேதுரு 5:1-2 இல் பேதுரு இவ்வாறு எழுதினார்:

> உங்களிலுள்ள மூப்பருக்கு உடன்மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேயுங்கள் (1 பேதுரு 5:1-2).

யோவான் சுவிசேஷம் கடைசி அப்போஸ்தலர்கள் மரிக்கும் போது எழுதப்பட்டதாக பெரும்பாலான அறிஞர்கள் நம்புகிறார்கள். இந்த கட்டத்தில் உயிருடன் இருக்கும் கடைசி அப்போஸ்தலராக கூட யோவான் இருந்திருக்கலாம். ஆகவே, தம்முடைய மந்தையின் மேய்ப்பர்கள் மூலம் இயேசு இன்னும் இருக்கிறார் என்பதை தேவனுடைய மக்கள் கேட்பது முக்கியம். இறுதியில் சபையை வழிநடத்தியது பேதுருவோ அல்லது வேறு எந்த அப்போஸ்தலரோ அல்ல. அவர்கள் அவரைப் பின்தொடர்ந்தபோது அது இயேசுவாக இருந்தார். அவர்கள் அவருடைய தூதுவர்களாகவும் உதவியாளர்களாகவும் மட்டுமே பணியாற்றினார்கள். எதிர்காலத்தில் அவர்களை வழிநடத்துவதற்காக உடல் ரீதியாகவும் நிரந்தரமாகவும் தம் மக்களிடம் திரும்புவதாக இயேசு உறுதியளித்தார்.

யோவான் சுவிசேஷத்தின் பின்னணி மற்றும் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் இரண்டையும் இப்போது நாம் பார்த்துவிட்டோம், யோவான் வலியுறுத்திய சில முக்கிய கருப்பொருள்களைக் கருத்தில் கொள்ள தயாராக இருக்கிறோம்.

# முக்கிய கருப்பொருள்கள்

யோவான் 20:30-31 இல் உள்ள தனது நோக்க அறிக்கையில் யோவான் பல முக்கியமான கருப்பொருள்களை பட்டியலிட்டுள்ளார், இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்:

> இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:30-31).

எங்கள் பாடத்தின் இந்த பகுதியில், யோவானின் நோக்க அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட நான்கு நெருங்கிய தொடர்புடைய கருப்பொருள்களில் கவனம் செலுத்துவோம், அவையாவன: விசுவாசத்தின் செயல், கிறிஸ்துவாக இயேசுவின் அடையாளம், தேவனின் குமாரனாக அவருடைய இணையான அடையாளம் மற்றும் அவர் கொண்டு வரும் வாழ்க்கையின் ஆசீர்வாதம். விசுவாசத்தைக் குறித்து யோவான் வலியுறுத்துவதை முதலில் பார்க்கலாம்.

## விசுவாசித்தல்

யோவான் கிரேக்க வார்த்தையான *பிஸ்டியோ* வை 106 முறை பயன்படுத்தினார், அதாவது "விசுவாசி" என்பது இதன் அர்த்தம். மற்ற மூன்று சுவிசேஷங்களும் சேர்ந்து 34 முறை இதை பயன்படுத்தின, யோவான் சுவிசேஷத்துடன் ஒப்பிடும்போது இது மூன்றில் ஒரு பங்கு மட்டுமே. இந்த வலியுறுத்தலில் உள்ள வேறுபாடு யோவானின் கதைக்கு விசுவாசித்தல் எவ்வளவு முக்கியம் என்பதைக் காட்டுகிறது.

யோவான் சுவிசேஷத்தில், விசுவாசம் என்ற கருத்து "பெற்றுக்கொள்", "வா" மற்றும் "அறி" போன்ற வார்த்தைகளால் குறிக்கப்படும் மற்ற கருத்துக்களுடன் நெருக்கமாக தொடர்புடையது. எனவே, இயேசுவை விசுவாசிப்பது என்பது அவரைப் ஏற்றுக்கொள்வதாகும், அவரிடம் வந்து, தனிப்பட்ட அனுபவத்தின் அர்த்தத்தில் அவரை அறிந்து கொள்வதாகும்.

இயேசுவை விசுவாசிப்பதும், ஏற்றுக்கொள்வதும், தெரிந்துகொள்வதும், இயேசுவிடம் வருவதும், கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கும் பின்பற்றுவதற்குமான தனிப்பட்ட முடிவின் ஒரு தருணமாகத் தொடங்குகிறது - இதையே தற்கால கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் "மன மாற்றம்" என்று அழைக்கிறார்கள். மனமாற்றம் உண்மையானதாக இருக்கும்போது, அது தேவனுடைய ஊழியத்தில் நாம் பங்குகொள்ளவும், பல்வேறு வழிகளில் அவருடைய ஆசீர்வாதங்களைப் பெறவும் செய்கிறது. யோவான் தனது சுவிசேஷத்தின் இந்த பகுதியில், தேவனுடைய பிள்ளைகளாக மாறுதல் மற்றும் நித்திய ஜீவனைப் பெறுதல் போன்ற சொற்களுடன் மனமாற்றத்தைக் குறிப்பிடுகிறார். யோவான் 1:12 இல் விசுவாசிப்பது பற்றிய யோவானின் விளக்கத்தைக் கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார் (யோவான் 1:12).

யோவான் 3:36 இல் இதே போன்ற மொழியைக் காண்கிறோம், இந்த வார்த்தைகளை நாம் இங்கே வாசிக்கிறோம்:

> குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை (யோவான் 3:36).

இது போன்ற வேத பகுதிகளில், விசுவாசம் என்பது நேர்மையான, இதயப்பூர்வமான, தனிப்பட்ட நம்பிக்கையின் செயல் மற்றும் அவருடன் நம்மை இணைக்கும் அர்ப்பணிப்பு ஆகும். இது வரலாற்றில் தேவனுடைய வேலையின் ஒரு பகுதியாக நம்மை ஆக்குகிறது. மேலும் இயேசு தம்முடைய முழு மகிமையிலும் வெளிப்படும் போதுதான் அது முழுமை அடையும்.

இப்போது, யோவான் எப்போதும் ”விசுவாசித்தல்” என்ற வார்த்தையை அதே வழியில் பயன்படுத்தவில்லை என்பதை உணர வேண்டியது அவசியம். சில வேத பகுதிகளில், மேலோட்டமான நம்பிக்கையைக் குறிக்க யோவான் ”விசுவாசித்தல்” என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். இதை இறையியலாளர்கள் பெரும்பாலும் ”தற்காலிக” அல்லது ”பாசாங்குத்தனமான” நம்பிக்கை என்று அழைத்தனர்.

உதாரணமாக, யோவான் 2:23-24 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

